விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 தாளம் 99 | வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 20 திங்கட்கிழமை (05.11.2012) | பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்



அணி திரள்வோம்

## ‘வாழ்வெழுச்சி’ச் சட்டமூலம் நிராகரிக்கப்பட்டால்

# யாழ்ப்பாணத்தில் 29,000 பேர் வடக்கில் ஓர் இலட்சம் பேர் பாதிப்பு

### கிடைத்துவரும் வசதி, வாய்ப்புகள் பறிபோகும் என்கிறார் சமுர்த்தி அதிகாரி

(ஆர். சிவரூபன்)

‘வாழ்வின் எழுச்சி’ எனப்படும் திவிநெகும திட்டம் நடைமுறைப படுத்தப்படாமல் கைவிடப்படுமா னால் யாழ்ப்பாணத்தில் சமுர்த்தி நலன்புரி வசதிகளைப் பெற்று வரும் சுமார் 29ஆயிரம் பேருக்கு அது கிடைக்காமல் போய்விடும் என்று சமுர்த்தி அதிகார சபை யின் சிரேஷ்ட அதிகாரியான இந் திரஜித் நந்தசேன தெரிவித்தார். இதேபோன்று வடபகுதியைச் சேர்ந்த சுமார் ஓர் இலட்சம் சமுர்த்திப் பயனாளிகள் தமக்கு கிடைத்துவரும் நன்கொடை மற் றும் வாய்ப்பு வசதிகளை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என் றும் அவர் தெரிவித்தார்.

திவிநெகும அபிவிருத்தி திணைக் களம் தொடர்பான சட்டமூலத் தைப் பாராளுமன்றத்தில் நிறை வேற்றுவதற்கு மாகாண சபைக- ளின் ஒப்புதலை பெற்றுக் கொள்ளுமாறு உயர்

02



இறுதிக் கட்ட யுத்தத்தின் போது முல்லைத்தீவு வெள்ளாமுள்ளிவாய்க்கால் பகுதியில் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட பெருந்தொகையான ஆயுதங் களை இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் மீட்டிருந்தனர்.

## கிளி., முல்லையில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு விசேட அமைச்சரவைப் பத்திரம்

(ஆர். சிவரூபன்)

“கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இதனை முடிவுக்கு கொண்டுவருவதற்கான விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றி னைச் சமர்ப்பிப்பதற்கான முயற்சி கள் விரைவில் மேற்கொள்ளப் படும். ஜனாதிபதியுடன் கலந்து பேசி இதற்கான முயற்சிகள் எடுக்கப் படும்” என்று அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி. நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன் தினம் தொண்டர் ஆசிரியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். “ஏனைய மாவட்டங்களில் தொண் டர் ஆசிரியர்கள் நியமிக்கப்படும் பொழுது ஏன்? கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் மட்டும் தொண் டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படுவதில்லை” என்று கலந் துரையாடலில் பங்குபற்றிய சிலர் கேள்வி எழுப்பியபோதே, நாமல் ராஜபக்ஷ எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

பட்டதாரிகளுக்கு மட்டுமே ஆசி ரியர் நியமனம் வழங்கப்படவேண் டும் என்று 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி பிரேரணையொன் றினை முன்வைத்தார். கிளி- நொச்சி, முல்லைத்தீவு மாவட்டங் களில் பட்டதாரிகளின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. ஜனா திபதியுடன் கலந்து பேசி கிளி- நொச்சி, முல்லைத்தீவு மாவட் டங்களில் நிலவும் ஆசிரியர்

02

## அரசியலமைப்புக்கு அமையவே பிரதம நீதியரசர் மீது நடவடிக்கை

### அமைச்சரவைப் பேச்சாளர்

(கொழும்பு)

“நீதித்துறையில் அரசாங்கம் தலையிடுவதில்லை எனினும் நீதித்துறைக்கும் ஏனையவர்களுக் கும் இடையில் பிரச்சினைகள் எழும்போது அதனை எவ்வாறு தீர்க்கலாம் என்பதற்கு அரசியல மைப்பில் ஏற்பாடுகள் இருக்கின் றன. பிரதம நீதியரசருக்கு எதி ரான குற்றப்பிரேரணையை பொறுத்தளவில்

02

## 33 இலட்ச ரூபா பணத்துக்காகவே செல்வம் எம்.பி.யின் மைத்துனர் கொலை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனரான சின்னத்துரை இந் திரேஸ்வரன் கொலை செய்யப்பட் டமை தொடர்பில் ஒருவர் சந்தே கத்தின் பேரில் கைது செய்யப் பட்டுள்ளார்.

இந்தக் கொலை குறித்து விசா ரணை நடத்திய கோட்டை பொலி ஸார் வெல்லம்பிட்டி பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் சந் தேகநபரைக் கைது செய்துள்ள னர். கைதானவர் சின்னத்துரை இந்திரேஸ்வரனுடன் சேர்ந்து தரகுவேலை பார்ப்பவர் என

02

## வடக்கு, கிழக்கிலிருந்து படைவிலக வேண்டும்:

### - அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

வடக்கும் மற்றும் கிழக்கு பகுதிகளில் பொதுமக்களின் நட வடிக்கைகளிலிருந்து இராணு வத்தை நீக்கிகொள்ள வேண்டும் என அமெரிக்காவின் இலங்கைக் கான தூதுவர் மிச்செல் சிசன் தெரிவித்துள்ளார்.

02

## மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராகவும் ஊழல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. மத்திய வங்கி ஆளுனர் ஊழல், மோசடிகளில் ஈடு பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கரு ணாநாயக்கவினால் இந்த முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரமிட் கொடுக்கல் வாங்கல், ஹெட் ஜிங் கொடுக்கல் வாங்கல், கிரேக்க பிணைப்பத்திரங்கள் கொள்வனவு, தி பினான்ஸ் நிறுவனத்தின் பங்கு களை தேசிய சேமிப்பு வங்கி

02

## கொழும்பு மோசடி தடுப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவு மூடப்பட்டது

(கொழும்பு)

இலஞ்ச, ஊழல் தொடர்பில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டமையை அடுத்து, கொழும்பு பொலிஸ் மோசடித் தடுப்புப் புலனாய்வு பிரிவு மூடப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு கடமையாற்றிய பொலிஸாரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான நடவடிக்கையை பொலிஸ்

02

## பிரதம நீதியரசர் விடயம் குறித்து இந்தியா மௌனம்

(கொழும்பு)

இலங்கையில் பிரதம நீதியர சருக்கு எதிராக கொண்டு வரப் பட்டுள்ள குற்றவியல் பிரேரணை தொடர்பில் கருத்துக் கூறுவதில் இந்தியா விலகி நிற்பதாக இந்திய வெளியுறவு

02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்!

# தமிழ் பத்திரிகைகளுக்கு எதிராகப் பத்து வருடங்களில் 15 முறைப்பாடுகள்!

(யோ. ஷாலினி)

"இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தனது பத்தாவது வருடத்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறது. இலங்கை பூராவுமிருந்து இந்த ஆணைக்குழுவுக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் எழுபது சதவீதமானவை சிங்களப் பத்திரிகைகள் சார்ந்தவை. தமிழ்ப் பத்திரிகைகள் தொடர்பாக இதுவரை பதினைந்து முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன" பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தமிழ் முறைப்பாட்டுப் பொறுப்பதிகாரி அமீர் ஹுசைன் தெரிவித்தார்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து நடத்திய கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார். ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கான இந்தப் பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இப் பயிற்சிப்பட்டறையில் இலங்கை பத்திரிகை முறைபாட்டு ஆணைக்குழு பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும், ஊடகவியலாளர்கள் செய்திகளை சேகரிக்கும் போது எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இக் கலந்துரையாடலின் போது கருத்து தெரிவித்த இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தமிழ் முறைப்பாட்டு பொறுப்பதிகாரி அமீர் ஹுசைன் கருத்து தெரிவிக்கையில் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஆரம்பித்து ஒன்பது வருடங்கள் நிறைவு பெற்று, பத்தாவது வருடத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இவ் ஆணைக்குழுவிற்கு இலங்கை பூராகவும் இருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டதாகவும், இதில் 70 சதவீதமானவை சிங்களப் பத்திரிகை சார்ந்த முறைப்பாடு எனவும் தமிழ்ப் பத்திரிகைகள் தொடர்பாக பதினைந்து முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.இவ் கலந்துரையாடலில் ஊடக வியலாளர்கள், ஊடகத்துறை மாணவர்கள், இத்துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இந்திய இராணுவத் தளபதி டிசம்பரில் இலங்கை வருகிறார்



இந்திய இராணுவ தளபதி ஜெனரல் பிக்ரம் சிங் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புகளுக்கு எதிராக தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையிலேயே இந்திய இராணுவ தளபதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது, இரு தரப்பு இராணுவ உறவுகளை பலப்படுத்துவது தொடர்பாக இந்திய இராணுவ தளபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

"எதிர்வரும் டிசெம்பர் மாதம் மூன்றாம் வாரத்தில் இந்திய இராணுவ தளபதி ஜெனரல் பிக்ரம் சிங் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

எனினும் அவர் இலங்கையில் தங்கியிருக்கும் நாட்கள் தொடர்பில் இரு தரப்புகளும் தீர்மானிக்கும்" என இராணுவ தகவல்கள் தெரிவித்தன.

இந்திய இராணுவ தளபதியின் இந்த விஜயத்தின் போது கூட்டுப் பயிற்சி, இராணுவ உபகரணம் மற்றும் பயிற்சிகள் தொடர்பில் இரு நாடுகளுக்கு இடையில் பேச்சு மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகின் முக்கிய பயங்கரவாத இயக்கங்களில் ஒன்றான விடுதலை புலிகளை ஒழித்த அனுபவங்களையும் இலங்கையிடமிருந்து அவர் பெற்றுக்கொள்ளவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நவ்ருவில் 300 பேர் உண்ணாவிரதம், 25 பேருக்கு மருத்துவ சிகிச்சை, 11 பேர் நாடு திரும்ப விருப்பம்

அவுஸ்திரேலியா நவரு தீவில் இருகின்ற இலங்கையை சேர்ந்த புகலிட கோரிக்கையாளர்களில் சிலர் மீண்டும் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது. இலங்கையை சேர்ந்த புகலிட கோரிக்கையாளர்களில் ஆண்கள் 11 பேரே இவ்வாறாக நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் புதிய குடியேற்ற சட்டத்தின் பிரகாரம் புகலிட கோரிக்கையாளர்களாக படகு மூலம் செல்பவர்கள் நவரு அல்லது பாப்புவா நியூ கினியா தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

தற்போது நவ்ரு தீவில் 377 புகலிடக் கோரிக்கையாளர்கள் இருக்கின்றனர். புகலிட கோரிக்கையாளர்களில் 300 பேர் உணவை மறுக்கின்றனர்.

மேலும் 25 பேருக்கு மருத்துவ சிகிச்சையளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

## கொழும்பு மோசடி...(தொடர்)

தலைமையகம் மேற்கொண்டுள்ளது.

குறித்த மோசடி தடுப்பு பொலிஸ் பிரிவின் நான்கு பொலிஸ் அதிகாரிகள் மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்டனர். கப்பம் மற்றும் லஞ்சம் பெற்றமை தொடர்பிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த பணத்தைப் பெறுவதற்காக குறித்த பொலிஸ் அதிகாரிகள் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றின் உரிமையாளரை பணயம் வைத்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

## பிரதம நீதியரசர்...(தொடர்)

அமைச்சர் சல்மான் குர்சித் தெரிவித்தார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை, இலங்கையின் உள்நாட்டு பிரச்சினையாகும். எனவே அது தொடர்பில் இந்தியாவினால் கருத்து எதனையும் கூறமுடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அமெரிக்கா கவலையை வெளியிட்டுள்ளமை குறித்த கருத்து வெளியிட்ட குர்சித், இலங்கையின் ஜனநாயக பண்புகளுக்கு இந்தியா ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்...(தொடர்)

நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்து இது தொடர்பான பாரிய சர்ச்சைகள் எழுந்தன. வடமாகாணத்தில் மாகாணசபை ஒன்று இல்லாத நிலையில் இதையொரு சர்ச்சையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிளப்பிவருகிறது. அடிமட்ட மக்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கும் வளம்படுத்துவதற்கும் வழிவகைகள் செய்யக்கூடிய பல்வேறு திட்டங்களை உள்ளடக்கியதாகவே வாழ்வின் எழுச்சிச் சட்டமூலம் கொண்டுவரப்படுகிறது. சுயதொழில் வாய்ப்பு, கடனுதவிகள் ஆகியனவற்றை மேலும் அதிகரித்து கொடுப்பதற்கான வசதி வாய்ப்புக்கள் இதன்மூலம் ஏற்படும் என்றும் இந்திரஜித் நந்த சேன தெரிவித்தார்.

இந்த 'வாழ்வின் எழுச்சி' சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க முனைபவர்கள் இதனால் பாதிக்கப்படப் போகின்றவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஏழை, எளிய மக்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்காக போராடுவதாகக் கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, திவிநெகும சட்டமூலம் நிறைவேற்றப்படாவிட்டால் யாழ் மாவட்டத்தில் மட்டும் இருபத்தொன்பதாயிரம் சமுர்த்திப் பயனாளிகளுக்கு இதனால் கிடைக்கும் வசதி வாய்ப்புகளும், நன்மைகளும் இல்லாமல் போகும் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். வட மாகாணத்தில் ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் நன்கொடைகள், கொடுப்பனவுகள் மற்றும் வசதி வாய்ப்புகளை இழப்பார்கள் என்றும் அவர் மேலும் கூறினார்.

## வடக்கு, ...(தொடர்)

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பொதுமக்களின் செயற்பாடுகளில் இராணுவத்தின் தலையீடு இன்னமும் காணப்படுகின்றது. எனவே இதனை விலக்கிகொள்ள வேண்டும். இலங்கையில் இன்னமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

## மத்திய வங்கி...(தொடர்)

கொள்வனவு செய்தமை உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகளுடன் மத்திய வங்கியின் ஆளுனருக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த அனைத்து மோசடிகளிலும் அஜித் நிவாட் கப்ராலுக்கு தொடர்பு இருப்பதாகவும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். இந்த முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கிளி, முல்லையில் ஆசிரியர்...(தொடர்)

பற்றாக்குறையை நீக்குவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்.

இதற்காக விசேட அமைச் சரவை பத்திரம் ஒன்றினை முன்வைப்பதற்கு வேண்டிய சகல முயற்சிகளையும் மேற்கொள் வேன் என்றும் நாமல் ராஜபக்ச எம்.பி. கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதாகக் கூறினீர்கள்.

அமைச்சரவைப் பத் திரங்களைச் சமர்ப்பித்ததன் மூலம் இந்த மாவட் டங்களில் தொண்டர் ஆசிரியர்களை நியமிப்பதற் கான அனுமதி பெறப்பட்டிருக்கலாம்.

2009ஆம் ஆண்டு கடைசியாக தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. தொண்டர் ஆசிரியர்கள் விரும்பினால் அரசாங்கத்தின் மக்கள் படையணித் திட்டத்தில் இணைந்து கொள்ளலாம். விரும்பாவிட்டால் இணை யத் தேவையில்லை.

மக்கள் படையணியில் இணைந்து கொள்பவர்களுக்கு மாதாந்தம் பதினைந்தாயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது.

மக்கள் படை யணியில் இணைந்து கொள்பவர்கள் பயிற்சி பெற வேண்டுமென்ற கட்டாயமோ, தேவையோ கிடையாது.

மக்கள் படையணிகளில் இணைபவர்கள் ஆசிரியர் சேவையில் இருந்துகொண்டே ஆசிரியப் பயிற்சிகளை பெறு வதற்கான வசதியும் உண்டு என்று கூறினார்.

## அரசியலமைப்புக்கு...(தொடர்)

அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமையவே அரசாங்கம் செயற்படுகிறது" என்று அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கெஹெலிய றம்புக்வெல தெரிவித்தார்.

ஜெனிவாவில் அனைத்துலக பருவகால மீளாய்வுக் கூட்டத்தில் அமெரிக்கா தெரிவித்த கருத்துக் குறித்துப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையை பொறுத்தளவில் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமையவே இலங்கை அரசாங்கம் நடந்துள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமையவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டுள்ளனர்.

ஈவிரக்கமற்ற காட்டுத் தர்பார் முறையில் இது நடந்திருந்தால் இந்த விமர்சனத்தை என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் இது அப்படியல்ல என்றார்.

## 33 இலட்ச ரூபா...(தொடர்)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள இரு வர்த்தகர்களிடம் தங்கம் வாங்கவென 33 இலட்சம் ரூபாவை இந்திரேஸ்வரன் பெற்றுக் கொண்டுள்ளார்.

அந்தப் பணத்தை பறிக்கும் நோக்கில் சின்னத்துறை இந்திரேஸ்வரனை கொலை செய்து கார் ஒன்றில் ஏற்றிச்சென்று நானுஓயா பகுதியில் குறித்த சந்தேகநபர் போட்டுச் சென்றுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 33 இலட்சம் ரூபாவும் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட காரும் கைப்பற்றப்பட்டதோடு கொலை செய்யப்பட்டவர் அணிந்திருந்த நான்கு மோதிரங்கள் வேறு ஒரு நபரிடம் கொடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் நானுஓயா, பங்களாவத்தையில் 111ஆம் இலக்க மைல்கல்லுக்கு அருகில் சடலம் மீட்கப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மனைவியினால் சடலம் அடையாளம் காட்டப்பட்டது.

கடந்த 30ஆம் திகதி முதல் இவரைக் காணவில்லையென காணாமல் போனவரது மனைவி கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன் கிழமை முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார். செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.யின் மனைவியின் சகோதரரான சின்னத்துரை இந்திரேஸ்வரன் (வயது 60) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த 30ஆம் திகதி காலை 6.15 மணியளவில் வேலைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ள இவர், இடையில் ஒருமுறை தனது மனைவியுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார். இதனையடுத்தே அவர் காணாமல் போயுள்ளார் எனக் குறித்த பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர், கொழும்பு, செட்டியார்த் தெருவில் உள்ள நகைக்கடையொன்றில் கணக்காளராக கடமையாற்றி வருகின்றார் எனவும் அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவித்தார்.




# வணக்கம் யாழ்ப்பாணம்!

பாரம்பரிய அரவணைப்பு மற்றும் விருந்தோம்பல் ஆகியவற்றுடன் உங்களுக்குச் சேவையாற்றுவதற்கு நாம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...

உங்கள் சகல பயணத் தேவைகளுக்கும் இல. 272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது பயண விற்பனை முகவர் நிலையத்துக்கு விஜயம் செய்யுங்கள்.

**தொலைபேசி – 0212220404**
**மின்னஞ்சல் – srilankan@metrotravels.lk**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் அனுமதி பெற்ற மெற்ரோ ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்.

M

SriLankan
Airlines
நீங்களே எங்கள் உலகம்

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 05.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# புலிகள் மீதான தடை: தீர்ப்பு ஒத்திவைப்பு

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கலாமா என்பது குறித்த தனது தீர்ப்பை டெல்லியில் உள்ள சட்டவிரோத செயல் தடுப்பு சிறப்பு தீர்ப்பாயம் ஒத்தி வைத்துள்ளது. கடந்த 1992 ம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடைவிதிக்கப்பட்டது.

இரண்டாண்டுக்கு ஒரு முறை இந்தத் தடையை மத்திய அரசு நீடித்து வருகிறது. எனினும், 2009ம் ஆண்டு விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை ராணுவத்திற்கும் இடையே நடைபெற்று வந்த போர், நிறைவடைந்த நிலையிலும், விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிக்கப்படுவதற்கு அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். மேலும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக சமீப காலமாக குற்றச்சாட்டுக்கள் ஏதும் இல்லாத நிலையில் தடை அவசியம் அற்றது என்றும் கூறி வருகின்றனர்.

இதுதொடர்பாக டெல்லியில் உள்ள சட்டவிரோத செயல் தடுப்பு சிறப்பு தீர்ப்பாயம் விசாரணை மேற்கொண்டு வந்தது.

அரசு தரப் பில் தடையை நீட்டிப்பதற்கான காரணத்தை அரசு வழக்கறிஞர் முன்ளளவைத்தார்.

இருதரப்பு வாதங்கள் முடிவடைந்த நிலையில், தேதி குறிப்பிடாமல் நீதிபதி வி. கே.சிங். தீர்ப்பை நேற்று ஒத்தி வைத்தார் இது குறித்து பேசிய மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, மத்திய அரசின் வாதம் ஏற்புடையதல்ல என்றும், விடுதலைப் புலிகள் மீதான குற்றச்சாட்டிற்கும் அந்த இயக்கத்திற்கும் தொடர்பு இல்லை எனவும் தெரிவித்தார்.

# தமிழகம் தவிர்ந்த இந்திய மாநிலத்தில் வழக்கை எதிர்கொள்வதற்குத் தயார்

**- அமைச்சர் டக்ளஸ்**

தமிழ்நாடு, சூளைமேட்டில் இடம் பெற்ற துப்பாக்கி பிரயோகம் தொடர்பான வழக்கு விசாரணையை, தமிழகம் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் நடத்தினால் அதை எதிர்கொள்வதற்கு தாம் தயாராக வுள்ளதாகவும், சூளைமேட்டுச் சம்பவம் தொடர்பில் அங்கு இடம் பெற்ற உண்மை நிலைமையினை தெளிவுபடுத்தத் தயாராக உள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அமைச்சு அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதேவேளை அரசினது திவிநெகும திட்டத்தை கூட்டமைப்பு எதிர்ப்பதற்கு கடுமையான விமர்சனங்களை முன்வைத்த அவர் அங்கு வரவழைக்கப்பட்டிருந்த யாழ். மாவட்ட சமுர்த்தி தலைமை அதிகாரி ரகுநாதனை விளக்கங்களை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

# சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாகவேனும் திவிநெகும சட்டமூலத்தை சட்டமாக்குவோம்

**- பசில் ராஜபக்ஷ**

"உயர்நீதிமன்றம் அறிவுறுத்துமாயின் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாகவேனும் திவிநெகும சட்டமூலத்தை சட்டமாக்குவோம்" என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சூளுரைத்தார்.

வடமாகாண சபை இல்லாத நிலையில் வடமாகாண ஆளுநர் இந்த சட்டமூலத்துக்கு ஒப்புதலளிக்க முடியுமா? என்ற பிரசசினை ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கின் தீர்ப்பு இப்போது சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் நாடாளுமன்றத்தில் நவம்பர் 6 ஆம் திகதி அறிவிக்கப்படும்.

சில சமயம் இந்த சட்டமூலத்துக்கான மக்களின் ஒப்புதலை ஒரு சர்வசன வாக்கெடுப்பு மூலம் பெற வேண்டிய தேவையும் எழலாம்.

நாம் அதற்கும் தயாராகவுள்ளோம். நாம் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து இந்த சட்ட மூலத்தை உரிய முறையில் சட்டமாக்குளவோம்.

வீட்டுத்துறை பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்து நுண் நிதி நிகழ்ச்சித்திட்டம் மூலம் மக்களை வறுமையிலிருந்து மீட்பதே "திவிநெகும இயக்கத்தின் நோக்கம் என்றார்.

# தமிழக நீதிமன்றத் தீர்ப்பிற்கு இலங்கை கடற்படையினர் பாராட்டு

சென்னை நீதிமன்றினால் நேற்று முன்தினம் அளிக்கப்பட்ட தீர்ப்பிற்கு இலங்கை கடற்படையினர் பாராட்டு தெரிவித்துள்ளனர். பாக்கு நீரிணையில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களுக்கு தற்பாதுகாப்பு நோக்கத்திற்காக துப்பாக்கிகள் எனக் கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும், இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இலங்கைக் கடற்படையினரால் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் அதனை தடுத்து நிறுத்த ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதிப் பத்திரங்களை வழங்குமாறு அரசாங்கத்திடம் தமிழக மீனவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, இந்திய மீனவர்களுக்கு நாம் அச்சுறுத்தல் விடுக்கவில்லை. எனினும் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதை அவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

ஆயிரக் கணக்கான தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்டு வருவது நாளாந்த பிரச்சினையாக தொடர்வதாக இலங்கையின் வடக்கு பகுதி மீனவர்களும் குற்றம் சாட்டி வருகின்றனர்.

# மக்கள் மன்றம்

## மாதகல் இளவாலை மக்களுக்கு பாரிய போக்குவரத்துப் பிரச்சினை

எங்களைப் புறக்கணிக்காமல் எங்களுக்கும் அரச பஸ் சேவைகளை நடாத்தி, எங்கள் அசௌகரியங்களைக் குறைக்குமாறு மாதகல், இளவாலை மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மாதகல் மற்றும் இளவாலைப் பகுதிகளில் சேவையில் ஈடுபட்டு வந்த 787, 788, 791 ஆகிய இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களின் சேவைகள் நிறுத்தப்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டன. இதுவரை மீண்டும் அந்த பஸ்களின் சேவைகள் ஏன் ஆரம்பிக்கப்படவில்லை என்று மக்கள் தமது ஆதங்கங்களை வெளியிட்டு வருகின்றனர்.

மேற்படி பகுதிகளில் இருந்து தமது நாளாந்தக் கடமைகளுக்காக தினமும் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், மக்கள் என்று பலரும் தமது அன்றாட தேவைகளுக்காக யாழ் நகருக்கு வந்து போகின்றனர். இதனால் இந்த இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபடாமையால் அதிக செலவு செய்து தனியார் பஸ்களிலோ அல்லது முச்சக்கர வண்டியிலேயே பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் அதிக செலவு மற்றும் தேவையற்ற அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் பருவகால டிக்கற்றுக்களை பெறமுடியாமல் கஷ்டப்படுகின்றனர். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இப் பகுதிகளுக்கு அரச போக்குவரத்து சேவைகளை உடன் நடாத்தி தமது வீண் செலவினையும் அசௌகரியங்களையும் குறைக்க முன்வருமாறு மக்கள் வேண்டுகின்றனர்.

# யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதி உதவி

2013ஆம் ஆண்டின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து கொட்டடி நமசிவாய வித்தியாலய விஞ்ஞானகூடம் கட்டிடத்தை பூர்த்தி செய்வதற்கு நிதியுதவி வழங்கப்படும்.

அதேவேளை, இசை அணிவகுப்புக்கான இசைக்கருவிகளும் பெற்றுத்தரப்படும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உறுதிமொழி வழங்கினார்.

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இன்றைய தினம் இடம் பெற்ற விஞ்ஞானகூடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பாடசாலை நீண்ட கால கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. அதேவேளை விஞ்ஞான கூடமொன்று இல்லாத நிலையில் தற்போது அது புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இப்பாடசாலைச் சமூகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக விஞ்ஞான ஆய்வுகூடத்தின் மேற் தளம் 2013 ம் ஆண்டின் பன் முகப்படுத்தப்பட்ட நிதியினூடாக பூர்த்தி செய்து தரப்படும் என்றார்.

பாடசாலை அதிபர் கணேச[illegible] தலைமையில் நடைபெற்ற நிக[illegible]வில் ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாண கல்விப் பணிப்பாளர் செல்வராஜா, யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உரை நிகழ்த்தினார்.

# பிரதம நீதியரசர் மீதான நடவடிக்கை குறித்து அமெரிக்கா தீவிர கவனம்

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து அமெரிக்கா கவனம் செலுத்தி வருகிறது.

இலங்கை நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான அழுத்தங்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருவதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நூலாண்ட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான அழுத்தங்கள் குறித்து கருத்து வெளியிட்ட நீதவான் ஒருவர் தாக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

சுயாதீன நீதிமன்றக் கட்டமைப்பிற்கு குந்தகம் ஏற்படும் வகையில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுப்பது பொருத்தமற்றது என்று இலங்கை அரசாங்கத்திடம் கோருவதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நூலாண்ட் குறிப்பிட்டுள்ளார்.

சட்டம் ஒழுங்கு, ஜனநாயகம், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# காக்கைதீவு கடற்கரை மீன்சந்தையை இடமாற்றவும்

**- கடற்தொழிலாளர் சங்கம் கோரிக்கை**

காக்கைதீவு கடற்கரையில் நடாத்தப்பட்டுவரும் மீன்சந்தையினையும், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்தினையும் வேறு இடத்திற்கு மாற்றுமாறு காக்கைதீவுக் கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் வேண்டியுள்ளனர்.

இந்தக் கடற்கரையில் இயங்கி வரும் மீன் சந்தையானது கடற்தொழிலில் ஈடுபடும் கடற் தொழிலாளர்களின் வலைகள், வள்ளம் என்பன நிறுத்துவதற்கு பெரும் இடைஞ்சலாக உள்ளன என்றும் தமது தொழில் நடவடிக்கைகளுக்கும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கடல் நீர் பெருக்கெடுக்கும் நேரங்களில் தமது வள்ளங்கள் சந்தைக் கட்டிடத்தினுள் உட்புகுவதனால் தமக்கும் சந்தைக்கும் பெரும் இடைஞ்சல் ஏற்பட்டு வருவதாகவும் மீனவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இச்சந்தையினை தமது கடற்கரைக்கு மேற்குப் பக்கமாக உள்ள காணியில் சமைத்துத் தருமாறும் வேண்டியுள்ளனர்.

மேலும் தற்பொழுது நடாத்தப்பட்டுவரும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் வீதியோரத்தில் காணப்படுவதனால் அதனையும் வேறு இடத்திற்கு மாற்றித் தமது தொழிலை இடைஞ்சலின்றி மேற்கொள்ள உதவுமாறு வேண்டப்பட்டுள்ளது.

இந்த மீன்சந்தையும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் என்பன மானிப்பாய் பிரதேச சபையினரால் நிர்வகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# சண்டிலிப்பாயில் சொந்தக் காணி இல்லாதவர்களுக்கு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தரக் காணி இல்லாதிருக்கும் குடும்பங்களின் விபரங்கள் மேற்படி செயலகத்தினரால் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

இந்தச் செயலக பிரிவில் வாழும் குடும்பங்களில் இதுவரை நிரந்தரக் காணியற்ற குடும்பங்கள் உடனடியாகத் தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

காணி அற்ற குடும்பங்கள் தங்கள் பகுதி கிராம அலுவலருடனோ அல்லது பட்டதாரிப் பயிலுனர்களுடனோ அல்லது பிரதேச செயலகத்துடனோ தொடர்பு கொண்டு தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

# மீள்குடியேறச் சென்ற மக்களுக்கு சூரியபுரத்தில் தலா 4 பரப்பு காணி

கேப்பாபிளவில் மீள்குடியேற்றப் பட்டுள்ள மக்களுக்கு சூரிபரத் தில் நிரந்தமாக வசிப்பதற்கான காணி உரிமம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட் டுள்ளது.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்ட மக்கள், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கேப்பாபிளவில் உள்ள சூரிபுரம் என்ற கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப் பட்டனர். மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் சூரிபுரத்தில் நிரந்தரமாக வசிப்பதற்கு அவர்கள் அனைவருக்கும் புதிய காணி உரிமங்கள் வழங்கப்பட் டுள்ளது.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, கேப்பாபிலவு சூரிபுரத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 165 குடும்பங்களுகளின் காணிகளிற்கு மாற்றீடாக நிரந்த காணி உரிமங்கள் வழங்கப்ட்டுள்ளதாக ஒவ்வொரு குடும்பத்திற்கும்

தலா நான்கு பரப்புக் காணி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் இங்கு மீள்குடியேறியுள்ள மக்களின் விவசாயத் தொழில் செய்யும் குடும் பங்களிற்கு விரைவில் விவசாய நிலம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட் டார்.

அத்துடன் இதுவரை மீள்குடியேறாத மக்களிற்கும் காணி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## காலியில் குழு மோதல் நால்வர் பலி

காலி - பொட்டால, பலாங் கொடை பிரதேசத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நான்கு பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி - பொட்டால, பலாங் கொடைச் சந்தியில் நேற்றுக் காலை நான்கு சடலங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இதன் பின்னராக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது குழு மோதலே கொலைக்கான காரணம் எனத் தெரிய வந்துள்ளது.

## இருவருக்கு விளக்கமறியல்

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முயற்சித்த இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அம்பலாந்தொட, லுனம பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இருந்த பெண் ஒருவர் மற்றும் சிறுவர்கள் இருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் திஸ்ஸமகாராம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்ட வேளை பெண் மற்றும் சிறுவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் படகு மூலம் அவுஸ் திரேலியாவிற்குச் செல்ல திட்டமிட்டிருந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சீனாவுக்குப் பயணமாகின்றனர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மூன்று பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று சீன அரசின் அழைப்பின் பேரில் திங்கட் கிழமை அதிகாலை பத்து நாள் சுற்றுப்பயணமாக சீனா புறப்படுகின்றது.

இந்தக் குழுவில் தமிழரசுக் கட்சியின் ஊடகத்துறைக்குப் பொறுப்பான உதவிச் செயலாளரும் சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளருமான ந.வித்தியாதரன், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தலைவர் சுகிர்தன், கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்ப சார்பில் போட்டியிட்ட கிருஷ்ண பிள்ளை சேயோன் ஆகியோர் அடங்குகின்றனர்.




'அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு ஆகியன தொடர்பான கொள்கை மற்றும் வழிமுறைகள்' என்ற தலைப்பில் - சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு ஏற்பாடு செய்துள்ள பல்வேறு அரசியல் கலந்துரையாடல்களில் இந்தக் குழுவினர் பங்குபற்றுவர்.

இம்மாதம் 5ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை இக்குழுவினர் சீனாவில் தங்கியிருப்பர் எனத் தெரி விக்கப்படுகின்றது.

## தமிழக மீனவர்கள் வெலிக்கடைக்கு மாற்றம்

தமிழக மீனவர்கள் 5 பேர் இலங்கை கடற்படையினரால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் செய்யப்பட்டு சிறையில் அடைக் கப்பட்டனர்.

அவர்கள் மீதான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

அடுத்த விசாரணை நவம்பர் 20ஆம் திகதி நடைபெறுகிறது.

இந்நிலையில் விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவதற்காக 5 மீனவர்களும் கொழும்பு வெலிக்கடை சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# சட்டவிரோத ஆயுதங்களை கையளிப்போருக்கு சன்மானம்

## மட்டக்களப்பில் சுவரொட்டிகள்

மட்டக்களப்பில் சட்டவிரோத ஆயுதங்களை கையளிக்குமாறும் அதற்கு சன்மானம் வழங்கப்படும் என தெரிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதங்களை வைத்திருப்போர் அல்லது ஆயுதங்களை தமது வதிவிடங்களில் கண்டோர், அது தொடர்பில் அருகில் உள்ள படை முகாம்களிலோ அல்லது பொலிஸ் நிலையங்களிலோ தெரியப்படுத்தி வெகுமதிகளைப் பெற்றுச் செல்லுமாறு துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரின் பல்வேறு இடங்களில் இந்தத் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

துப்பாக்கிகளையோ, துப்பாக்கிகளின் உதிரிப்பாகங்களையோ, பிற வெடி பொருட்களையோ வைத்திருப்பது சட்டவிரோதமாகும். அவ்வாறானவர்கள் கண்டறியப்பட்டால் பிணையில் வரமுடியாத தடுப்புக்காவல் வழங்கப்படும். இதன் காரணமாக தடுப்பில் இருப்பவரின் குடும்பம் வாழ வழியின்றி தவிக்கும் நிலையேற்படும்.

ஆகவே நீங்கள் கண்டெடுத்த துப்பாக்கிகளையோ, அல்லது ஏதேனும் ஆயுத உபகரணங்கள் உங்கள் வசம் இருந்தால் அல்லது உங்கள் வதிவிடத்தில் எங்காவது கண்டிருந்தால் அருகில் உள்ள பாதுகாப்புப் படைமுகாமுக்கோ அல்லது பொலிஸ் நிலையத்துக்கோ தெரியப்படுத்தி அதற்குரிய வெகுமதிகளை பெற்றுச் செல்லுங்கள்.

ஆயுதங்கள் தொடர்பிலான தகவல்கள் வழங்கினால் அவற்றை பாதுகாப்பு படையினர் கவனமாக அகற்றுவர் எனத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் கண்டெடுக்கும் ஆயுதங்களுக்கான வெகுமதித் தொகைகள் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்களும் அதில் காணப்படுகின்றன.

ஆனால் இது யாரால் வெளியிடப்பட்டது. யார் இதற்கு உரிமை கோருகின்றனர் என்ற எதுவித விளக்களும் துண்டுப் பிரசுரங்களில் இல்லை.

## சபாநாயகரை சந்திக்க திட்டம்

நீதித்துறை கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமைகள் குறித்து சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுடன் கலந்துரையாட இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மாத்துள்ளது.

நீதித்துறை மற்றும் அரசியல் யாப்புக்கு இடையில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த எதிர் பார்த்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட் டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கூடி இது குறித்து கவனம் செலுத்தியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 7 ஆம் திகதி கூடவுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயற்குழுவிலும் இது குறித்து ஆராயப்படவுள்ளது.

## சிறுவன் தற்கொலை

மதவாச்சி, லிதவெல்ல பிரதேசத்தில் 16 வயதுச் சிறுவன் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இத்தற்கொலைச் சம்பவத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவனின் தாயார் தற்போது வெளிநாட்டிற்கான பயணம் ஒன்றை மேற்கொண் டுள்ளதாகவும் சிறுவனின் தந்தை இராணுவத்தில் கடமையாற்றிய நிலையில் காணாமற் போயுள் ளார்.

இந்நிலையில் சிறுவன் உறவினர் ஒருவருடன் வசித்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மன்னார் கட்டுக்கரைக்குள நீர் மட்டம் உயர்ந்துள்ளது

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையயடுத்து மன்னார் முருங்கன் கட்டுக்கரைக் குளத்தின் நீர்மட்டம் தற்போது அதிகரித்துக் காணப்படுவதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. முகமட் றியாஸ் தெரிவித்தார்.

மன்னார் முருங்கன் கட்டுக் கரைக்குளத்தில் தற்போது 9.5 அடி நீர் காணப்படுகின்றது. இந்நிலையில், கட்டுக்கரைக் குளத்திலிருந்து நீர் விநியோகிக் கப்படுகின்ற 162 குளங்களிலும் தற்போது போதியளவு நீர் காணப் படுகின்றனவெனவும் அவர் கூறினார். மன்னார் மாவட்டத்தில் கடந்த 5 மாதங்களுக்கும் மேலாக மழை பெய்யாத நிலையில் கடும் வறட்சி காணப்பட்டது. இதனால் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்ததுடன், மக்களும் தமது அன்றாட தேவைகளுக்கான நீரை பெற்றுக் கொள்ளுவதில் சிரமத்தை எதிர் நோக்கினர்.

மன்னார் மாவட்டத்தில் தற் போது பெய்த கடும் மழையையடுத்து மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்துக் குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர் நிறைந்துள்ளது.



இந்நிலையில், விவசாயிகள் இம்முறை பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளும்போது நீருக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் இல்லை. இம்முறை நம்பிக்கையுடன் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான சூழ்நிலை அமைந்துள்ளதெனவும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## அமைச்சர் அமரவீர அதிருப்தி

அரச உத்தியோகத்தர்கள் தமது பணிகளை முறையாகச் செய்வதில்லை என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

அவ்வாறான உத்தியோகத்தர்கள் குறித்து எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

களனி கங்கை பெருக்கெடுத்ததால் பாதிக்கப்பட்ட மக்களை அமைச்சர் நேற்றுமுன்தினம் 3 ஆம் திகதி சென்று பார்வையிட்டார்.அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளி யிட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
நவம்பர் மாதம் 05ஆம் திகதி திங்கட்கிழமை

# சட்டவாக்க சபையா? நீதித் துறையா?

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணையொன்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றப் பிரேரணை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து நாளை பாராளுமன்றம் கூடும்போது, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் 225 எம்.பீ.க்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் மூன்றிலொரு பங்கினர் கைச்சாத்திட்டு இந்தக் குற்றவியல் பிரேரணையைச் சமர்ப்பிக்க முடியும். ஆனால் இதில் 117 எம்.பீ.க்கள் கைச்சாத்திட்டுள்ளனர். சபாநாயகரால் நியமிக்கப்படும் பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியொன்று பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தும்.

இலங்கையின் முதலாவது பெண் பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்கா என்பது குறிப்பிடத்தக்கது. இவர் மீது ஏழு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். இவற்றில் சில பிரதம நீதியரசரின் தனிப்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமானவை என்று தெரிவிக்கப்படுகின்றது. வேறு சில அவரின் உத்தியோகபூர்வ நடவடிக்கை தொடர்பானவை என்றும் சொல்லப்படுகிறது. அத்துடன் பிரதம நீதியரசர் தொடர்பாக லஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவிடமும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும் சொல்லப்படுகிறது.

பிரதம நீதியரசரின் சகோதரி, வீடு ஒன்றைக் கொள்வனவு செய்தாரென்றும், அன்றைய தினமே அந்த வீட்டை பிரதம நீதியரசர் பொறுப்பெடுத்தாரென்றும் ஒரு குற்றச்சாட்டு இருப்பதாக தெரியவருகிறது. வங்கி ஒன்றில் பிரதம நீதியரசருக்கு ஆறு நடைமுறைக் கணக்குகள் இருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இரண்டு பிரதம நீதியரசர்களுக்கு எதிராக குற்றவியல் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. திரு.நெவில் சமரக்கோன் கியூ.சி. அவர்களுக்கும், சரத் என் சில்வாவுக்கும் எதிராகவே குற்றவியல் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. திரு.நெவில் சமரக்கோன் பிரதம நீதியரசராக இருந்த காலத்தில் ஜனாதிபதியாக இருந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. 1984ஆம் ஆண்டு கொள்ளுப்பிட்டியில் உள்ள சின்னத்துரை வர்த்தகக் கல்லூரியில் நீதியரசர் நெவில் சமரக்கோன் ஆற்றிய உரையே பிரச்சினைக்கு காரணமாக அமைந்தது. பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனின் உரை ஜனாதிபதி ஜெயவர்த்தனவை ஆத்திரப்படுத்தியது. பிரதம நீதியரசரின் வீட்டுக்கு கற்களும் வீசப்பட்டன. ஜனாதிபதி ஜெயவர்த்தனவினால் ஏவி விடப்பட்ட குண்டர்களே பிரதம நீதியரசரின் வீட்டுக்கு கற்களை வீசினார்கள் என்றும் அப்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் கணவரான பிரதீப் காரியவசத்தின் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும், பின்னர் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராகவும் அவர் பணியாற்றியிருக்கிறார். தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராக அவர் பணியாற்றிய காலத்தில் பங்குகள் கொள்வனவு செய்தமை தொடர்பாக அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. பிரதம நீதியரசராக திருமதி ஷிராணி பண்டாரநாயக்க இருக்கையில், அவரது கணவர் மீதான வழக்கு விசாரணை மாவட்ட நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் எடுக்கப்படுகிறது.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவராகவும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கதான் பணியாற்றுகிறார். அவரையும் ஏனைய இரண்டு உயர்நீதிமன்ற நீதியரசர்களையும் தன்னை வந்து சந்திக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நிராகரித்தார்கள். ஜனாதிபதியை சந்திக்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பு, நீதித்துறையில் மேற்கொள்ளப்படும் அநாவசியத் தலையீடு என்றே வர்ணிக்கப்பட்டது. ஆனால் ஜனாதிபதியே நிதி அமைச்சராகப் பணியாற்றுகிறார் என்ற வகையிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. வரவு செலவுத் திட்ட விவகாரங்கள் பற்றி ஆராய்வதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாக ஜனாதிபதி தரப்பில் கூறப்பட்டது.

இதன் பின்னர் நீதித்துறையில் அநாவசியத் தலையீடுகள் இருப்பதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண பகிரங்கமாகவே அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். இதன் பின்னர் மஞ்சுள திலகரட்ண பட்டப்பகலில் பகிரங்க இடமொன்றில் வைத்து இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவத்தின் எதிரொலியாகவே நீதித் துறைக்கும் செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதி தரப்பினருக்கும் இடையில் முரண்பாடுகள் கூர்மையடைந்தன என்று வர்ணிக்கப்பட்டது. ஏட்டிக்குப் போட்டியான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

செயலாற்றுமிகு அதிகாரமிகு ஜனாதிபதி முறைமை, சட்டவாக்க சபையான பாராளுமன்றம், நீதித்துறை ஆகிய மூன்றுமே அரசாங்க ஆளுகையின் முக்கிய தூண்களாகக் கருதப்படுபவை. இந்த மூன்று நிர்வாகக் கட்டமைப்புகளும் பரஸ்பர நம்பிக்கையோடும் பொறுப்புணர்வோடும் செயற்படவேண்டியவை. சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தின் தலைவர் சபாநாயகர். நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் உயர்நீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா. இருந்தபோதிலும் நீதித்துறையா அல்லது சட்டவாக்க சபையான பாராளுமன்றமா என்ற போட்டி மனப்பான்மையோடு அல்லாமல் உண்மைகள் வெளிக் கொண்டுவரப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் வேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# மூன்று இலட்சம் தமிழ் மக்களை அகதிகளாக்கிய 3ஆவது ஈழப்போர்



1995ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி யாழ்ப்பாண நகரம் என்றும் இல்லாதவாறு வெறிச்சோடிக் காணப்பட்டது. சுமார் அறுநூறு வருடகால வரலாற்றைக் கொண்டது யாழ் நகரம். மூன்று வாரங்களுக்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் மையம் கொண்ட மூன்றாவது ஈழப் போரின் விளைவாகவே யாழ்ப்பாணம் வெறிச்சோடியது.

வீடுகளுக்குள்ளும் மக்கள் இல்லை. வீதிகளிலும் மக்கள் இல்லை. புலிகள் இயக்கத்தினர் விடுத்த கடுமையான எச்சரிக்கையையடுத்து சுமார் மூன்று இலட்சம் மக்கள் யாழ் நகரத்தைவிட்டு வெளியேறியிருந்தனர். வெளியேற்றப்பட்டனர். ஆடுகள், மாடுகள், நாய்கள் கோழிகள் போன்ற வளர்ப்பு மிருகங்களையெல்லாம் அப்படியே விட்டுவிட்டு மக்கள் வெளியேறிவிட்டனர்.

**"1995ஆம் ஆண்டு மூன்றாவது ஈழப்போர் யாழ்ப்பாணத்தில்தான் மையங்கொண்டு வெடித்தது. சந்திரிகா குமாரதுங்கா அரசுடன் சுமார் நூறு நாட்களாகப் பேச்சுவார்த்தை நடத்திய புலிகள், திருகோணமலைக் கடற்பரப்பில் வைத்து கடற்படைக் கப்பல்கள் மீது திடீர்த் தாக்குதல் நடத்தியதையடுத்து மூன்றாவது ஈழப்போர் வெடித்தது. யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் மூன்று இலட்சம் மக்களை அகதிகளாக விரட்டிய அந்தக் கொடூரம் பற்றிய ஒரு மீள்பார்வை இது."**

நான்காவது ஈழப்போர் மையம் கொண்டது வன்னிக்குள். மூன்றாவது ஈழப்போர் யாழ்ப்பாணத்துக்குள் மையம் கொண்டது. சந்திரிகா அரசாங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த புலிகள் 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி திருகோணமலைக் கடற்பரப்பில் வைத்து இரு கடற்படைக் கப்பல்கள் மீது திடீர்த் தாக்குதலை நடத்தினர். இதுவே மூன்றாவது ஈழப்போருக்குப் பிள்ளையார் சுழி போட்டது.

சந்திரிகா அரசுக்கும் புலிகளுக்குமிடையில் 14 மாதங்களாக இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததையடுத்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் போர் நடவடிக்கைகளை இலங்கை அரசு ஆரம்பித்தது. 1995 ஜூலையில் கிழக்கு மாகாணத்தின் மணலாறு பகுதியில் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் பயங்கர மோதல் இடம்பெற்றது. இம்மோதலில் சுமார் இருநூறு புலிகள் கொல்லப்பட்டனர்.

வடக்கின் அளவெட்டியில் ஜூலை மாதம் 14ஆம் திகதி படையினருக்கும் புலிகளுக்குமிடையில் பாரிய மோதலொன்று இடம்பெற்றது. புலிகள் தரப்பில் சுமார் அறுபது பேர் கொல்லப்பட்டனர். மோதல்கள், ஷெல் தாக்குதல்கள் அதிகரித்ததால் பெரும்பாலான மக்கள் யாழ்ப்பாணத்தை நோக்கித் தப்பிச் சென்றனர். ஜூலை மாதம் 19ஆம் திகதி வாக்கில் படையினர் தந்திரோபாய ரீதியாகத் தாக்குதலை நிறுதினர். யாழ்ப்பாணத்தைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவித்து அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதே அரசின் திட்டமாக இருந்தது. மக்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தாமல், அவர்களுடன் சுமுகமாகப் பழகும் தந்திரோதபாயங்களைப் படையினர் கடைப்பிடித்தனர்.

அக்டோபர் மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கில் இராணுவம் மீண்டும் படை நடவடிக்கைகளை ஆரம்பித்தது. பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் மக்களை தஞ்சடையுமாறு கோரும் துண்டுப் பிரசுரங்களை விமானப் படையினர் விமானங்களிலிருந்து கீழே போட்டனர். புலிகள் இருக்கும் இடங்களை நெருங்க வேண்டாமென்றும் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஜூலை மாதத் தாக்குதல்களில் புலிகள் பாரிய இழப்புகளைச் சந்தித்ததால் ஏற்கனவே தமது பல

– எஸ். அருளானந்தன்

முகாம்களையும் அலுவலகங்களையும் கிளிநொச்சிக்கு இடம் மாற்றியிருந்தனர். ஒக்டோபர் மாதம் ஐந்தாம் திகதி இராணுவம் புத்தூரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. புத்தூர் மோதலில் 150க்கு மேற்பட்ட தமது உறுப்பினர்களைப் புலிகள் இயக்கம் இழந்தது. மோதலின் உக்கிரத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் பாதுகாப்புத் தேடித் தப்பியோடிய மக்கள் சிலர் தம்மோடு கூட்டிச் செல்லமுடியாத நோயாளர்களையும், நடமாட முடியாத வயோதிபர்களையும் கைவிட்டுச் சென்றனர். இவர்களில் பலர் புத்தூர் மிஷன் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்தனர். இந்த ஆஸ்பத்திரி மீது ஒன்பதாம் திகதி புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். இச் சம்பவத்தில் எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். இராணுவம் நிலை கொண்டிருக்கும் பகுதிகளை விட்டு வெளியேறுமாறு ஏற்கனவே புலிகள் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர். தமது உத்தரவை மீறியவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் புலிகள் அறிவித்தனர். இந்த மிஷன் ஆஸ்பத்திரிக்கு ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்குச் சில நாட்கள் முன்னதாக இராணுவ அதிகாரிகள் சிலர் விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டிருந்தனர். இது அரசாங்க தொலைக்காட்சிகளிலும் காண்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் உறுதியான நோக்கோடு அக்டோபர் மாதம் பதினேழாம் திகதி ஒப்பரேசன் ரிவிரச (சூரியக்கதிர்) தாக்குதல் நடவடிக்கையை இராணுவம் ஆரம்பித்தது. மோதல்களுக்கு மத்தியிலும் வெளியேற முடியாமலும் வெளியேற விரும்பாமலும் மக்கள் பலர் தத்தம் வீடுகளிலும், பாதுகாப்பான இடங்களிலும் தங்கியிருந்தனர். ஒக்டோபர் மாதம் முப்பதாம் திகதி வாக்கில் சுமார் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் யாழ் குடாநாட்டின் மேற்குப் பகுதியில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்தனர். யாழ்ப்பாண நகரப் பகுதி உட்படக் கோவில்கள், தேவாலயங்கள், பொது இடங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் மக்கள் தஞ்சமடைந்திருந்தனர். நல்லூர் கந்தசாமி கோயில் வளாகமும் அகதிகளுக்காகத் திறந்துவிடப்பட்டிருந்தது. யாழ் பல்கலைக் கழகத்திலும் மக்கள் தங்கியிருந்தனர்.

யாழ்ப்பாண நகரம் அகதிகளால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஒக்டோபர் மாதம் முப்பதாம் திகதி பின்னேரம் புலிகளின் ஒலிபெருக்கிகள் எச்சரிக்கை அறிவித்தல்களை விடுத்தன. ஒலிபெருக்கி பூட்டிய வாகனங்களில் பல இடங்களுக்குச் சென்ற புலிகள் கீழ்க்கண்ட அறிவிப்பை விடுத்தனர்.

"இந்த அறிவித்தலை எவரும் சாதாரணமான ஒன்றாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒரு பிசாசுப் படையுடன் நாம் வீரத்துடனும் துரிதமாகவும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம். அந்தப் படைகள் பல்வேறு திசைகளிலிருந்தும் எம்மைத் தாக்கும்.

அதற்கு நாம் அதே பாணியில் பதிலடி கொடுப்போம். இனவெறிக்குள் மூழ்கியிருக்கும் இந்த அரசுக்கு எதிராக, ஒவ்வொரு அங்குல நிலத்தையும் பாதுகாப்பதற்காக நாம் போராடுகிறோம். ஆகையால் யாழ் மக்களே! நீங்கள் இன்றே இரவோடிரவாக தென்மராட்சிக்கும் வடமராட்சிக்கும் இடம்பெயர வேண்டும்"

இப்படித்தான் புலிகள் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிப்பை விடுத்தனர்.

*(தொடர்ச்சி நாளை)*

# 13 ஆவது திருத்தமே தீர்வின் அடிப்படை

**பதின்மூன்றாவது அரசியல் அமைப்புத் திருத்தம், பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டி, 'திவிநெகும' எனப்படும் வாழ்வின் எழுச்சி, இன்றைய யதார்த்த களநிலை உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அளித்த பேட்டி இங்கே தரப்படுகிறது.**

பேட்டி கண்டவர்– சுஜப் எம். காசிம்

**கேள்வி**: ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டுமெனக் கோருகின்றார்களே! அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியான ஈ.பி.டி.பி இது தொடர்பில் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

**பதில்:** 13ஆவது திருத்தமே தீர்வின் அடிப்படை. இதனைத் தொடக்கமாகக் கொண்டே தீர்வு முயற்சிகளை மேற்கொள்ள முடியும். 13 பிளஸ் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கருத்துக் கூறியுள்ளார். அத்துடன் திவிநெகும சட்டமூலம் வாயிலாக கிராமிய அபிவிருத்தியை மேற்கொள்வதோடு வறுமை யையும் நீக்க முடியும். எமது மக்களுக்கு இரண்டுமே தேவையாகிறது.

**கேள்வி:** ஆனால் 'திவிநெகும' எனப்படும் 'வாழ்வின் எழுச்சிச்' சட்டமூலம் மத்திய அரசின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும் முயற்சியென்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போன்ற சில கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. நீங்கள் அதிகாரப்பகிர்வைக் கோருகின்யர்கள். இதை எந்த வகையில் நோக்க முடியும்?

**பதில்:** தமிழர் பிரச்சினைக்கு தமிழ்க் கூட்டமைப்பு ஒருபோதும் தீர்வை நாடி நிற்கவில்லை. அவர்கள் ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டு. அவர்கள் ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு கதை சொல்பவர்கள். தொட்டிலையும் ஆட்டுவர். பிள்ளையையும் கச்சிதமாகக் கிள்ளிவிடுவர். அவர்களுக்கு நிரந்தரமான தீர்வில் அக்கறையுமில்லை. தேவையுமில்லை. தேசியப் பிரச்சினை இழுத்தடிக்கப்படுவதே அவர்களுக்குத் தேவையான ஒன்று. கடந்த காலங்களில் பல்வேறு அரிய சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அவர்கள் அதனைப் பயன்படுத்தவில்லை. பிரச்சினையைத் தீர்க்க உதவவில்லை. அந்த நேரத்தில் 13ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டபோது "அதனை மிகச் சிறியது - மிகத் தாமதமானது" என கூட்டமைப்பு விமர்சித்தது. இப்போது 13ஆவது திருத்தத்துக்காக கூக்குரலிடுகின்றனர். கடந்த காலத்தில் பயங்கரவாதப் பிரச்சினை இருந்தது. நாங்கள் அதற்கு முடிவு கட்டினோம். அதைப் போன்று தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு விரைவில் வழியேற்படுத்துவோம். பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் இது மேற்கொள்ளப்படும்.

**கேள்வி:** பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நடை முறைப்படுத்துவதில் சிக்கலாகவுள்ளதே?

**பதில்**: அனைத்து தரப்பினரையும் இந்தக் குழுவுக்குள் உள்வாங்குவதே அரசாங்கத்தின் எண்ணமும் நோக்கமும். தமிழ்க் கூட்டமைப்பும் இதில் பங்கெடுக்க வேண்டுமென்பதே அரசின் விருப்பம். இது ஒரு தேசியப் பிரச்சினை. எனவே ஒவ்வொருவரினதும் பங்குபற்றுதலும் தேவையாகிறது. கூட்டமைப்பு இதில் பங்கேற்க மறுத்தால் நாங்கள் மாற்று உபாயங்களைக் கையாள வேண்டிவரும். கூட்டமைப்பின்றி நாங்கள் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிவரும். புலிகள் வெல்ல முடியாத ஒரு சக்தியாக கருதப்பட்ட காலம் ஒன்றிருந்தது. ஆனால் அவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்.

**கேள்வி:** தமிழ்க் கூட்டமைப்பு பங்கேற்காமல் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அரசாங்கம் முன்னெடுக்குமென்று நீங்கள் நினைக்கின்யர்களா?

**பதில்:** நான் முன்னர் பலதடவை குறிப்பிட்டது போன்று புலிகளின் பிரச்சினையிலிருந்து தமிழ் மக்களின் பிரச்சினை வேறுபட்டது. அதைப்போன்று தமிழ்க்கூட்டமைப்பின் பிரச்சினைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அல்ல. தமிழ்க்கூட்டமைப்பை இந்த விவகாரத்தில் ஒரு பக்கத்தில் நாம் வைத்துவிட்டு நமது பிரச்சினைகளுக்கு தீர்வு பெற வேண்டும்.

**கேள்வி**: 13ஆவது திருத்தம் தீர்வுக்கு வழியேற்படுத்தும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?

**பதில்:** இது ஒரு ஆரம்பமே. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு சிறந்த அடிப்படை.

**கேள்வி**: அரசாங்கத்தின் பங்காளிக்கட்சிகளான மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி ஆகியன 13ஆவது திருத்தத்தை இல்லாமலாக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனவே?

**பதில்:** இது ஒரு ஜனநாயக நாடு. ஒவ்வொருவருக்கும் அபிப்பிராயமும் நோக்கமும் இருக்கின்றது. நாடு என்ற ரீதியில் நாங்கள் ஒருமித்து செயற்பட வேண்டும். கடந்த காலத்தில் இந்தத் திருத்தத்தை ஐ.தே.க அறிமுகம் செய்தபோது ஸ்ரீ.ல.சு.க எதிர்த்தது. தற்போது அக்கட்சி அதனை ஏற்றுக்கொள்கின்றது. சகல மாகாண சபைகளையும் தற்போது ஸ்ரீ.ல.சு.க யே நிர்வகிக்கின்றது.

**– அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

**கேள்வி**: 13ஆவது திருத்தச் சட்டத்தில் நீங்கள் ஏதாவது குறைபாடுகளைக் காண்கிறீர்களா?

**பதில்**: இருக்கக்கூடும். ஆனால் நான் அதைப்பற்றி கவலைப்படவில்லை. ஆனால் நாம் இந்த இடத்திலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். இந்தச் செயன்முறை முன்னெடுக்கப்படும் போதே நாங்கள் பிரச்சினைகளைக் கண்டறிய முடியும். இதனை நடைமுறைப்படுத்தும்போது பிரச்சினைகளை இனங்காண முடியும். அதன் பிறகு தீர்த்துக்கொள்ளலாம். தமிழர் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளும் வகையிலேயே இந்தத் திருத்தம் அறிமுகஞ் செய்யப்பட்டது. ஆனால் புலிகள் இருந்த வேளை இதன் பயனை அடைந்து கொள்ள முடியாது போய்விட்டது.

இப்போது நாம் இதனை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. வடக்குக்கும் இதனை நாம் பிரயோகிக்க வேண்டும்.

**கேள்வி**: இந்தத் திருத்தம் இல்லாதொழிக்கப்படுமாயிருந்தால் இதன் விளைவுகள் என்னவாகும்?

**பதில்:** உங்கள் கேள்விக்கு என்னால் இந்த தருணத்தில் பதில் சொல்ல முடியாது. ஆனால் அரசாங்கம் அவ்வாறான எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.

**கேள்வி**: இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் 1987இல் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்தம் குறித்த உங்கள் அனுபவங்களைக் கூறமுடியுமா?

**பதில்:** தமிழ் மக்கள் பிரச்சினையில் தத்தளித்த ஒரு காலப்பகுதி அது. ஆளுந்தரப்பு மக்களைப் பற்றிக் கிஞ்சித்தும் சிந்தித்துப் பார்க்காத ஒரு காலம் "தி" தான் தீர்வு என ஆளுங்கட்சி கூறும் "கி" தான் சரியான தீர்வு என எதிர்க்கட்சி பதிலுக்கு கூறும். எனவே நீண்ட காலமாக தமிழர் பிரச்சினை இழுபட்டுக்கொண்டிருந்தது. தமிழ்மக்கள் ஆயுத மோதல்களுக்குள் அகப்பட்டுத் துன்பப்பட்ட ஒரு காலம். அந்தக் காலகட்டத்திலேதான் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**கேள்வி** : 13ஆவது திருத்தம் கொண்டு வரப்படுவதில் இந்தியா பெரும் பாத்திரம் வகித்தது. இந்தியா இன்னுமே அந்தப் பாத்திரத்தை தொடர்ந்தும் வகிப்பதாக நீங்கள் நினைக்கின்றீர்களா?

**பதில்** : உள்நாட்டிலேயே தீர்வு ஒன்றைக் காண வேண்டுமென்பதே எனது கருத்தாகும். அவர்களால் மருத்துவ மாது போன்றே உண்மையில் தொழிற்பட முடியும். தாய் நாடான இலங்கை தனது குழந்தையை பிரசவிக்கும். வெளி நாட்டுத் தலையீடுகள் மேலும் பிரச்சினைகளைச் சிக்கலாக்கவே உதவும். தமிழ்க்கூட்டமைப்பு இந்தியாவுக்கும் பிறநாடுகளுக்கும் உதவிதேடிச் செல்கின்றது. இது ஒரு முறையான வழியல்ல. மேலும் பல்வேறு தடுமாற்றங்களை ஏற்படுத்தவே இது வழிவகுக்கும் வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபையின் வரதராஜப் பெருமாளின் நியமனம் கூட தவறுகளை பல ஏற்படுத்தியது. எனக்கு இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் இந்தப் பிரச்சினையை யதார்த்த ரீதியில் தீர்த்துவைக்க முடியும்.

**கேள்வி** : இந்திய நீதிமன்றம் உங்களுக்கெதிராக குற்றப்பத்திரிகை சமர்ப்பித்துள்ளதே. இந்த நிலைமையை நீங்கள் எவ்வாறு கையாள்கின்றீர்கள்?

**பதில்** : தமிழ்நாட்டில் சேரிப்புறமொன்றில் சட்டவிரோத கூட்டம் ஒன்றை கூட்டியதாக என்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது ஒரு கொலைக் குற்றச்சாட்டல்ல. ஆனால் தமிழ் ஊடகங்கள் இதனை ஊதிப் பெருப்பிக்கின்றன. இந்தியாவின் குற்றவியல் நீதிமன்றத்தில் தான் என் மீதான இந்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. சென்னை நீதிமன்றில் எனக்கு நீதி கிடைக்காவிடின் நான் புதுடெல்லியிலுள்ள மேல் நீதிமன்றில் நீதி கோருவேன். அதன் பின்னர் உச்ச நீதிமன்றம் செல்வேன். நான் அமைதியை நிலைநாட்டவே அந்தப் பகுதிக்கு சென்றேன். வரதராஜப் பெருமாள், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் அங்கு நின்றனர்.

**கேள்வி** : வடமாகாண தேர்தல் எந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றது?

**பதில்** : இது முக்கியமானது. அடுத்த வருடம் செப்டம்பரில் தேர்தல் இடம்பெறுமென ஜனாதிபதி அறிவித்துள்ளார். களநிலைமைகளைச் சரிசெய்ய எமக்கு காலம் தேவைப்படுகின்றது. கறி சமைக்க முன்னர் அதற்குரிய பதார்த்தங்களைச் சேர்க்க வேண்டும். தேர்தலுக்கு முன்னர் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்ற வேண்டியுள்ளது.

**கேள்வி** : வடமாகாண தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடும் எண்ணம் இன்னும் உள்ளதா?

**பதில்** : நிச்சயமாக. நாம் தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையும் உள்ளது.





# அமெரிக்க அதிபர் தேர்தலும் சர்வதேசத்தின் எதிர்பார்ப்பும்

உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க அதிபர் தேர்தல் வரும் 6 ம் தேதி நடக்க இருக்கும் நிலையில், அமெரிக்க அதிபர் தேர்தலில் உச்சக்கட்ட பிரச்சாரம் என்றெல்லாம் ஊடகங்கள் சொல்லிவருகின்றன.

ஆனால் உண்மையில் அமெரிக்கா போன்ற ஒரு தொழில் வளமான, முன்னேறிய நாட்டில், இந்த தேர்தல் என்ற ஜனநாயக நடைமுறை, இந்தியா அல்லது இலங்கை போன்ற, பின் காலனிய ஜனநாயக சமூகங்களைப் போலல்லாமல், சற்று வித்தியாசமாகவே நடக்கிறது.

அமெரிக்க அதிபர் தேர்தல், பலரும் நினைப்பதைப் போல நேரடியான வாக்களிப்பு மட்டும் அல்ல. போட்டியிடும் வேட்பாளர், நாட்டின் ஒட்டு மொத்த பதிவான வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளை வாங்கினால் மட்டும் போதாது. அவர் , மாநிலங்களில் அதிபரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வு செய்வோர் அவை" யில் பெரும்பான்மை வாக்குகளைப்பெற வேண்டும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் அதன் வாக்காளர் எண்ணிக்கையைப் பொறுத்து இந்த தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் ஒதுக்கப்படுகிறார்கள்.

உதாரணமாக மிக அதிக மக்கள் தொகையைக் கொண்ட கலிபோர்னியா மாநிலத்துக்கு 55 தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் உண்டு. அதே போல மிகச் சிறிய மாநிலமான ஐயோவா மாநிலத்துக்கு 6 உறுப்பினர்கள்.

மொத்தம் இந்த தேர்வு செய்வோர் அவையில் 538 உறுப்பினர்கள் இருப்பதால் , அதிபர் தேர்தலில் வெல்ல வேண்டுமென்றால், இந்த அவையில் 270 வாக்குகளை பெறவேண்டும். இதில்சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்த மாநிலங்களில் பெரும்பாலானவை, மாநில வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவருக்கு, இந்த மாநிலத்தின் எல்லா அவை உறுப்பினர் இடங்களையும் தந்துவிடுகின்றன. ஒரு சில மாநிலங்களில் மட்டுமே விகிதாச்சார நடைமுறை இருக்கிறது.

எனவே, நாட்டில் பதிவான வாக்குகளில் பெரும் பான்மை வாக்குகளைப் பெற்று, அதே சமயத்தில்


சில மாநிலங்களில் தோற்றதன் மூலம், இந்த தேர்வு செய்வோர் அவை வாக்குகளில் தேவைப்படும் 270 வாக்குகளைப்பெற முடியாமல் போனால், வெற்றி வாய்ப்பை இழக்க நேரிடுகிறது. கடந்த 2000ம் ஆண்டு நடந்த தேர்தலில், ஜார்ஜ் புஷ்ஷுக்கு எதிராக போட்டியிட்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல் கோர், இது போலத்தான், தேசிய அளவில் மக்கள் நேரடியாகப்போட்ட வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றாலும், மாநிலத் தேர்வு செய்வோர் அவை வாக்குகளைப் பெறும் போட்டியில் புளோரிடா மாநிலத்தை சர்ச்சைக்குரிய விதத்தில் புஷ்ஷிடம் இழந்ததன. மூலம், அதிபர் தேர்தலில் தோற்றார் என்பது சமீபத்திய வரலாறு.

இன்னொரு விஷயம், இது நாட்டின் அதிபரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் என்றாலும், தேர்தலை நடத்தும் பொறுப்பு மாநிலங்களிடமே இருக்கின்றது. எனவே, தேர்தலில் தங்களுக்கு பெரும்பான்மை ஆதரவு இருக்கும் மாநிலங்களில் பொதுவாக இரு பிரதான கட்சிகளும் குறி வைப்ப தில்லை. உதாரணமாக், ஜனநாயகக் கட்சி யின் கோட்டைகள் என்று வரலாற்று ரீதியாகவே கருதப்படும் கலிபோர்னியா, நியுயார்க் போன்ற மாநிலங்களிலோ, அல்லது குடியரசுக் கட்சி பலமாக இருக்கும் டெக்ஸாஸ் போன்ற மாநிலங்களிலோ இரு கட்சிகளின் பிரச்சாரங்களைப் பெரிதும் காண முடி யாது.

ஸ்விங் ஸ்டேட்ஸ் அதாவது, வாக்காளர்கள் வரலாற்று ரீதியாக மாறி மாறி வாக்களித்து வரும் சுமார் 11 மாநிலங்கள் இந்தப் பட்டியலில் இருக்கின்றன. ஒஹையோ, புளோரிடா, கொலராடோ விஸ்கான்சின், மிச்சிகன், போன்ற இந்த மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் சுமார் 96 தெரிவு செய்வோர் அவைக்கான உறுப்பினர்களைப் பெறத்தான் கடுமையாக இரு வேட்பாளர்களும் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள்.

இந்த மாநிலங்களில் நேரடிப் பிரச்சாரத்தைத் தவிர, தொலைகாட்சி மூலம் கட்சிகளே நேரடியாகச் செய்யும் விளம்பரங்கள் மற்றும், வேட்பாளர்களின் ஆதரவு குழுக் கள் எல்லாம் சேர்ந்து தொலைக்காட்சி சேனல்களில் கடும் பிரச்சாரத்தை செய்கின்றன.

இது தவிர, சூப்பர் பேக்ஸ் எனப்படும், அரசியல் நடவடிக்கைக் குழுக்கள் - இவை பெரு வணிக நிறுவனங்கள் -- மற்றும் சித்தாந்த சார்புக் குழுக்கள் ஆகியவைகளால் செய்யப்படும் விளம்பரங்களும் தொலக்காட்சிப் பிரச்சாரத்தை சூடு பறக்க வைக்கின்றன.



ஒபாமாவுக்கு 48 சதவீதம் வெற்றி வாய்ப்பு உள்ளதாக கருத்து கணிப்பு தெரிவிக்கிறது.

அமெரிக்க அதிபர் தேர்தல் அடுத்த மாதம், 6ம் தேதி நடக்கிறது. ஜனநாயக கட்சி சார்பில், அதிபர் ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். குடியரசு கட்சி சார்பில், மாசாசூசெட்ஸ் முன்னாள் கவர்னர், மிட் ரோம்னி போட்டியிடுகிறார். இருவரும் பல்வேறு மாகாணங்களில், சூறாவளி பிரசாரம் செய்து வருகின்றனர். அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், ஒரே மேடையில் விவாதிப்பது, 1960ம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. மூன்று முறை, இவர்கள் பல்வேறு இடங்களில் ஒரே மேடையில் விவாதித்து, தங்கள் தரப்பு வாதத்தை எடுத்துரைத்தனர்.

முதல் சுற்று விவாதம், டென்வர் நகரிலும், இரண்டாவது சுற்று விவாதம் நியூயார்க்கிலும், மூன்றாவது சுற்று விவாதம் புளோரிடாவிலும் நடந்தன.

புளோரிடாவில், ஒரே மேஜையில், அருகருகே உட்கார்ந்து ஒபாமாவும், மிட் ரோம்னியும், பொருளாதாரம் மற்றும் உள்நாடு மற்றும் வெளிநாட்டு விவகாரங்களை 90 நிமிடங்கள் காரசாரமாக விவாதித்தனர். இஸ்ரேலுடன் உறவை மேம்படுத்த வேண்டும் என, ரோம்னி கூற, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தும் நாட்டை முறியடிப்போம் என, ஒபாமா உறுதியளித்தார். ஒபாமாவின் வெளியுறவு கொள்கையை மிட்ரோம்னி குறை கூறினார்.


**இதற்கு பதிலளித்த ஒபாமா கூறியதாவது:**

துனிசியா, எகிப்து, லிபியா போன்று சிரியாவிலும் ஆட்சி மாற்றம் வரும். லிபியா நாட்டின் அமெரிக்க தூதரகத்தில் நடந்த சம்பவத்தினால், நம்நாட்டின் மீதான ஆதரவு குறைந்து விட வில்லை. அமெரிக்க ராணுவத்துக்கு போதுமான நிதி ஒதுக்கப்பட்டு வல்லரசு நாடுகளுக்கு இணையாக படைகளை வைத்துள்ளோம். இதை ரோம்னி அறிந்திருக்கவில்லை. பயங்கரவாதிகளை ஒடுக்க தவறியதாக கூறி பாகிஸ்தானுடனான உறவை துண்டித்து கொள்ள முடியாது. அந்த நாட்டின் ஒத்துழைப்புடன் தான் ஒசாமாவை கொல்ல முடிந்தது. இவ்வாறு ஒபாமா கூறினார்.

ஈரானை கட்டுப்படுத்த ஒபாமா அரசு தவறி விட்டதாக ரோம்னி புகார் தெரிவித்தார்.இதற்கு மறுப்பு தெரிவித்த ஒபாமா ஈரான்மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டுள்ளது.இதனால், அந்நாட்டின் பொருளாதார பலம் பங்கு சரிந்து விட்டது. எண்ணெய் உற்பத்தியும் கணிசமாக குறைந்து விட்டது என்றார்.

இந்தியா குறித்து இவர்கள் விவாதத்தில் ஏதும் இடம் பெறவில்லை.சீனாவின் முறையற்ற வர்த்தகத்துக்கு முற்றுபுள்ளி வைக்க வேண்டும், என்றார் ரோம்னி. ஏற்கனவே, சீனாவின் முறையற்ற வர்த்தகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அந்நாட்டின் போலி டயர் கம்பெனிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், அமெரிக்க பொருட்கள் சீனாவுக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்படும் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஒபாமா தன் தரப்புவாதத்தை வைத்தார்.

ஒரு கட்டத்தில் ஒபாமாவின் வெளியுறவு கொள்கையை மிட் ரோம்னி ஏற்றுக்கொண்டார். மூன்றாவது சுற்று விவாதத்தின் மூலம் ஒபாமாவின் வெற்றி வாய்ப்பு அதிகரித்துள்ளதாக சி.என்.என்.,கருத்து கணிப்பு தெரிவிக்கிறது. அடுத்த மாதம் நடக்க உள்ள தேர்தலில் ஒபாமாவுக்கு 48 சதவீத ஆதரவு உள்ளதாகவும், மிட் ரோம்னிக்கு 40 சதவீத ஆதரவு உள்ளதாகவும் கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.





வரலாற்றில் முதல்முறையாக அமெரிக்க அதிபர் தேர்தல் பணிக்காக மட்டும் 2.6 பில்லியன் டாலர் பணம் செலவிடப்பட்டுள்ளது. 2012ல் தேர்தலுக்காக அதிகபட்சமாக 6 பில்லியன் டாலர் செலவிடப்பட்டுள்ளது. இதற்கு முன் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் நடத்தப்பட்ட தேர்தலுக்காக செலவிடப்பட்ட 700 மில்லியன் டாலர்களே அதிகபட்ச தொகையாக இருந்து வந்தது. இந்த அதிகபட்ச தொகை வரலாற்று சாதனை மட்டுமல்ல, தேர்தலுக்கு தேர்தல் அதற்காக செலவிடப்படும் தொகையின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு ஒரு நாளே உள்ள நிலையில் தேர்தலுக்காக செலவிடப்பட்ட தொகை செப்டம்பர் இறுதி வாரத்தில் 19 மில்லியன் டொலர்களாகவும், அக்டோபர் முதல் வாரத்தில் 33 மில்லியன் டொலர்களாகவும், அக்டோபர் 21ல் இத்தொகை 70 மில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது. இந்த தேர்தலுக்காக நிறுவனங்கள் மற்றும் தனிமனித அமைப்புக்கள், செனட் சபை உறுப்பினர்கள் ஆகியோர் அளித்து வரும் தொகையும் அதிகரித்து வருகிறது.


பராக் உசேன் ஒபாமா (Barack Hussein Obama பலுக்கல்: பிறப்பு: ஆகஸ்ட் 4, 1961), ஐக்கிய அமெரிக்காவின் தற்போதைய குடியரசுத் தலைவர். 2008 குடியரசுத் தலைவர் தேர்தலில் மக்களாட்சிக் கட்சி வேட்பாளராகப் போட்டியியிட்டு வெற்றி பெற்றார். அதற்கு முன் இவர் அமெரிக்க நாடாளுமன்ற மேலவையில் (செனட்) இலினொய் மாநிலத்தின் சார்பில் இளைய உறுப்பினராகப் பணியாற்றினார். அமெரிக்க வரலாற்றில் ஆபிரிக்க அமெரிக்க இனத்தை சேர்ந்த முதலாவது குடியரசுத் தலைவர் என்ற பெருமையும், மற்றும் செனட் அவையின் உறுப்பினரான ஐந்தாவது ஆப்பிரிக்க-அமெரிக்க இனத்தவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

கொலம்பியா பல்கலைக்கழகத்திலிருந்தும் ஹார்வர்ட் சட்டக் கல்லூரியிலிருந்தும் பட்டங்களை பெற்ற ஒபாமா அரசியல் உலகத்தை சேர்வதற்கு முன்பு சிக்காகோவின் தெற்கு பகுதியில் சமுதாய ஒருங்கிணைப்பாளராகவும் (community organizer) பொதுச் சட்ட வழக்கறிஞராகவும் பணியாற்றினார். 1997இல் இலினொய் மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு 2004 வரை பதவியில் இருந்தார். 1992 முதல் 2004 வரை சிக்காகோ பல்கலைக்கழக சட்டக் கல்லூரியில் பேராசிரியராகவும் பணியாற்றினார். 2000இல் அமெரிக்கக் கீழவை தேர்தலில் தோல்வி அடைந்து 2003 ஜனவரியில் மேலவையை சேர்வதற்கு பிரச்சாரத்தை தொடங்கினார். இலினொய் மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் பொழுதே, 2004ல் மக்களாட்சிக் கட்சி தேசிய சம்மேளனத்தில் இவர் ஆற்றிய சிறப்புரை தேசிய அளவில் கவனம் பெறச்செய்தது. பின்னர் நவம்பர் 2004 இல் அமெரிக்க மேலவை தேர்தலில் 70மூ வக்குகளைப் பெற்று மேலவையை சேர்ந்தார்.

2004இல் மக்களாட்சிக் கட்சி மேலவையில் சிறுபான்மையாக இருந்த காலத்தில் ஒபாமா பதவியில் ஏறினார். நடுவண் அரசின் ஆயுதங்கள் கட்டுப்பாட்டை உறுதியாக்க சட்டத்தை படைத்தார். 2006இல் மக்களாட்சி கட்சி பெரும்பான்மை பெற்றதற்கு பிறகு தேர்தல் மோசடி, காலநிலை மாற்றல், அணுசக்தி தீவிரவாதம், முன்னாள் படையினர்களுக்கு நல்வாழ்வு போன்ற பிரச்சனைகளை தொடர்புடைய சட்டங்களை எழுதினார். பெப்ரவரி 2007இல் குடியரசுத் தலைவர் தேர்தல் போட்டியை அறிவித்த ஒபாமா ஈராக் போரை முடிவுக்கு கொணர்தல், ஆற்றல் சுதந்திரம் அடைதல், வெளி அமைப்புகளால் அரசியல்வாதிகள் மீது தாக்கத்தை குறைதல், அனைவருக்கும் சுகாதார திட்டம் என்றே தனது முக்கிய நோக்கங்கள் என்று கூறுகிறார்.




## பராக் ஒபாமா
## Barack Obama



ஐக்கிய அமெரிக்காவின்
குடியரசுத் தலைவர் பதவியேற்பு
ஜனவரி 20, 2009

உதவி தலைவர் - ஜோ பைடன்
முன்னவர் - ஜார்ஜ் டபிள்யூ. புஷ்

இளைய செனட்டர்
(இலினொய் இலிருந்து)
பதவியில் பதவியேற்பு
ஜனவரி 4, 2005

ரிச்சர்ட் டர்பின் உடன் பணியாற்றுகிறார்
முன்னவர் - பீட்டர் ஃபிட்ஸ்ஜெரல்ட்
பின்வந்தவர் - அறிவிக்கப்படவில்லை

இலினொய் மாநில மேலவை உறுப்பினர்
13வது மாவட்டத்தில் இருந்து பதவியில்
ஜனவரி 8, 1997 - நவம்பர் 4, 2004

முன்னவர் - அலிஸ் பால்மர்
பின்வந்தவர் - குவாமி ராவுல்
அரசியல் கட்சி - மக்களாட்சிக் கட்சி

**பிறப்பு**
ஆகத்து 4, 1961 (அகவை 51)
ஹொனலுலு, ஹவாய், ஐக்கிய அமெரிக்கா

**வாழ்க்கைத்துணை**
மிசெல் ஒபாமா (தி. 1992)


**பிள்ளைகள்**
மலியா ஆன் (பி. 1998),
சாஷா (பி. 2001)

**இருப்பிடம்**
கென்வூட், ஐக்கிய அமெரிக்கா

**பழைய மாணவர்**
கொலம்பியா பல்கலைக்கழகம்,
ஹார்வர்ட் சட்டக் கல்லூரி துறை
சட்டத்தரணி
அரசியல்வாதி

**சமயம்**
புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம்

**கையொப்பம்**



**இணையதளம்**
obama.senate.gov

# ஊடகங்களைப் புலிகள் தமது தேவைக்காக பயன்படுத்துகின்றனர்

ஊடகங்கள் தனிப்பட்டவரை மட்டுமல்ல, தாய் நாட்டைப் பற்றி உலக மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். மக்களை சரியான பாதையில் கொண்டு செல்வது ஊடகங்களின் பொறுப்பாகும்.

ஒரு காலத்தில் என்னையும் அமைச்சரவையின் நிருபர் என்றனர். புலிகள் இன்று ஆயுதங்களினால் அல்ல, ஊடகங்களினூடாகவே போராட்டம் நடத்த ஆரம்பித்துள்ளனர்என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

2012 வரவு செலவுத் திட்ட உரையின் போது பிரகடனப்படுத்தியதற்கு இணங்க, ஊடகவியலாளர்களுக்கு மடிகணினிகளும் சிரேஷ்ட கலைஞர்களுக்கு வட்டியற்ற வாகனம் கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டத்தினை வைபவ ரீதியாக வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு, அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி கூறுகையில்,

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக எழுத வேண்டும். சுதந்திரமாக கேள்விகளை கேட்க வேண்டும். அதற்கான சுதந்திரம் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் ஒருமுறை, ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினார். அந்த மாநாட்டுக்கு இங்கிருக்கின்றவர்களில் சிலர் சென்றிருக்கலாம். இந்தியா உட்பட வெளிநாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் வருகை தந்திருந்தனர்.

அந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இந்தியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர்களே கூடுதலான கேள்விகளைக் கேட்டனர். ராஜீவ் காந்தி மரணம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பாலசிங்கம் மன்னிப்பு கேட்டமை எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது.

ஆனால், பிரேமதாஸ, லலித் அதுலத்முதலி, காமினி பொன்சேகா ஆகியோரின் படுகொலைகள், ஹரந்தலாவ, திம்புலான போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், தலதா மாளிகை, ஸ்ரீமா போதி ஆகிய வணக்கஸ்தலங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பிலும் படுகொலைகள் குறித்தும் இலங்கை ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பவில்லை.

கேள்விகளை கேட்டிருந்தாலும் அவர்களால் பாதுகாப்பாக திரும்பியிருக்க முடியாது. எனினும், நாட்டில் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பொதுமக்கள் இன்று பாதுகாப்பாக இருக்கின்றனர்.

தராதரமின்றி கேள்விகளைக் கேட்கவும், திரைப்படங்களைத் தயாரிப்பதற்கும் சுதந்திரம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. எனினும், ஊடகவியலாளர்கள் வாழ்க்கையை உயர்த்தினால் மட்டுமே அவர்கள் சுதந்திரமாக செயற்படுவார்கள். இல்லையேல், யாருக்கும் அடிபணிந்துவிடுவார்கள்.

நாங்கள் யாருக்கும் கடன்கொடுக்கவில்லை. இது எங்களுடைய கடப்பாடாகும். புலிகள் அமைப்பினர் உலகில் ஊடகங்களை

## ஜனாதிபதி

நடத்துவது உங்களுக்கு தெரியும். ஊடக நிறுவனங்களை அப்படியே விலைக்கு பெற்றுவிடுகின்றார்கள்.

ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காகவும் பலியான தங்களுடைய அங்கத்தவர்களின் குடும்பங்களையும் பெற்றோர்களையும் காப்பாற்றி அவர்களுக்கு வாழ்வளிப்பதற்காகவும் காசு கொடுத்தவர்கள் இன்று ஊடகங்களை விலைக்கு வாங்குவதற்கு பணம் கொடுக்கின்றனர்.

புலிகள் இன்று ஆயுதங்களினால் அல்ல, ஊடகங்களினூடாக போராட்டம் நடத்த ஆரம்பித்துள்ளனர். ஊடகங்கள் தனிப்பட்டவரை மட்டுமல்ல, தாய் நாட்டைப் பற்றி உலக மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

மக்களை சரியான பாதையில் கொண்டு செல்வது ஊடகங்களின் பொறுப்பாகும். ஒரு காலத்தில் என்னையும் அமைச்சரவையின் நிருபர் என்றனர் என்றார்.

# அமெரிக்க டொலர்களை கடத்த முயன்ற இருவர் கைது

மாலைதீவுக்கு 22ஆயிரம் அமெரிக்க டொலர்களை (30 இலட்சம் ரூபாய்) கடத்திச் செல்ல முற்பட்ட இருவரை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

காற்சட்டைப் பைகளில் வைத்து மறைத்தே இவர்கள் இந்த அமெரிக்க டொலர்களை கடத்த முற்பட்டார்கள் என்றும் கைது செய்யப்பட்ட இருவரும் பொரளை மற்றும் சிலாபம் பிரதேசங்களைச் சேர்ந்த கருவாடு விற்பனையாளர்கள் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இடமாற்றம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக கடமையாற்றிய குகநாதன் தனது சுய விருப்பத்தின் அடிப்படையில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளாரே அன்றி, அவர் எந்தவொரு அரசியல் காரணங்களுக்காகவும் இடமாற்றம் செய்யப்படவில்லை என்று பாரம்பரிய கைத்தொழில்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## தமிழக மீனவர்கள் விவகாரம்:

# துப்பாக்கி, முப்படைப் பாதுகாப்பு கோரும் மனு நீதிமன்றத்தால் தள்ளுபடி

இலங்கை கடல் எல்லையில் மீனவர்களுக்கு முப்படை பாதுகாப்பு அளிக்க மத்திய அரசுக்கு உத்தரவிடுமாறும் மீனவர்கள் பாதுகாப்புக்கு துப்பாக்கி வழங்க வேண்டும் என்றும் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தள்ளுபடி செய்துள்ளது.

இந்திய மீனவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது. எனவே அவர்களுக்கு முப்படை பாதுகாப்பு அளிக்கவேண்டும். மேலும் கச்சத்தீவை மீட்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். மீனவர்கள் பாதுகாப்புக்கு துப்பாக்கி வழங்க வேண்டும் என மதுரை வழக்குரைஞர்கள் பி.ஸ்டாலின், வி.கண்ணன், வீரவாஞ்சிநாதன் ஆகியோர் மேற்படி மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இம்மனுவை கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதிகள் வினோத் கே.சர்மா, ஏ.செல்வம் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச், அம்மனுவை தள்ளுபடி செய்தது.

அத்துடன், சர்வதேசக் கடல் எல்லை ஒப்பந்தப்படி யாரும் எல்லைதாண்டிச் சென்று மீன்பிடிப்பதை அனுமதிக்க முடியாது என்றும் மீனவர்கள் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றத்தினால் முப்படையினருக்கு உத்தரவிட முடியாது என்றும் மேற்படி நீதிபதிகள் குழு குறிப்பிட்டது.

இதேவேளை, தமிழக மீனவர்கள் அப்பாவிகள், அவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும் என்ற வாதத்தை ஏற்க முடியாது. எந்த ஒரு நாடும் அவர்களது எல்லைக்குள் வரும் கப்பல்கள் தங்களது சுதந்திரத்துக்கும் எல்லைக்கும் அச்சுறுத்தலாகக் கருதினால் அதைத் தடுக்க தகுந்த நடவடிக்கையை எடுப்பார்கள். அதில் நீதிமன்றம் தலையிட முடியாது. இரு நாடுகளுக்கும் இடையேயான எந்த ஒப்பந்ததிலும் இந் நீதிமன்றம் தலையிட வழியில்லை. ஏனெனில் இது வெளிநாட்டு விவகாரம்.

மனுதாரர்களின் வாதங்களுக்கு நிரூபணமான ஆதாரங்கள் இல்லை. அனைத்தும் பத்திரிக்கை செய்திகள் அடிப்படையிலானவை. மேலும் மனுதாரர்கள் கேட்டுள்ள நிவாரணங்கள் அனைத்தும் இந்த நீதிமன்றத்தின் வரம்புக்கு அப்பாற்பட்டவை. மேலும் இப்பிரச்சினை தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தை இந்திய அரசு அணுக வேண்டும் என்கின்றனர். அதற்கு ஆதாரமாக குஜராத் நீதிமன்ற வழக்கை மேற்கோள் காட்டியுள்ளனர்.

இதுகுறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. சர்வதேச நீதிமன்றத்துக்கு ஒரு பிரச்சினையை எடுத்துச் செல்வது மத்திய அரசின் விருப்பத்தைப் பொறுத்தது. இம்மனுக்கள் விசாரணைக்குத் தகுதி உடையவை அல்ல. இருப்பினும் மீனவர்கள் உயிர், மீன்பிடிக்கும் சுதந்திரம் போன்றவை குறித்த கேள்விகள் எழுகின்றன.

மத்திய - மாநில அரசுகள் மீனவர் பாதுகாப்புக்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து கடலோர காவல்படை இயக்குநர் ஜெனரல் விபரித்துள்ளார். கச்சத்தீவு மீட்புக் குறித்து மத்திய மாநில அரசுகள் தான் தீர்வு காணவேண்டும் எனக் கூறிய நீதிபதிகள் குழு, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# மத்திய வங்கி ஆளுநர் மீது ஐ.தே.க. முறைப்பாடு

மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினால் மத்திய வங்கியின் ஆளுனருக்கு எதிராக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய வங்கி ஆளுனர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரமிட் கொடுக்கல் வாங்கல், ஹெட்ஜின் கொடுக்கல் வாங்கல், கிரேக்க பிணைப்பத்திரங்கள் கொள்வனவு, தி பினான்ஸ் நிறுவனத்தின் பங்குகளை தேசிய சேமிப்பு வங்கி கொள்வனவு செய்தமை உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகளுடன் மத்திய வங்கியின் ஆளுனருக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த அனைத்து மோசடிகளிலும் அஜித் நிவாட் கப்ராலுக்கு தொடர்பு இருப்பதாகவும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். இந்த முறைப்பாடு தொடர்பி[illegible] நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க மாட்டிறைச்சி

அமெரிக்க மாட்டிறைச்சியை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்கு அமெரிக்க இறைச்சி ஏற்றுமதிக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. அதுமட்டுமன்றி அமெரிக்க உற்பத்திப் பொருட்களை பரவலான வீச்சில் ஏற்றுமதி செய்வதற்கும் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## இன்றைய இராசி பலன் (05.11.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 20ஆம் நாள் திங்கட்கிழமை**

**நட்சத்திரம்** : புநர்பூசம் பி.ப. 5.15 வரை அதன் பின் பூசம்
**திதி** : சஷ்டி பி.ப. 12.43 வரை. அதன் பின் சப்தமி
**சுபநேரம்** : 12.05 - 1.35 **இராகுகாலம்** : 7.35 - 9.05
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : சுபச்செலவு, விருந்துபசாரம், அயலவர் உதவி
**இடபம்** : காரிய சித்தி, உத்தியோக உயர்வு, பிறருக்கு உதவி
**மிதுனம்** : மன அமைதி, பிரயாணச் செலவு, மற்றவர்களால் பிரச்சினை
**கடகம்** : தொழில் உற்சாகம், உறவினர் உதவி, அமைதி குறைவு
**சிங்கம்** : வாக்குபலிதம், சந்தோசமான சம்பவம், பிறருக்கு உதவி
**கன்னி** : தடுமாற்றம், மனக்குழப்பம், அலைச்சல்
**துலாம்** : காரியத்தடை, தொழில் மாற்றம், வீண் மனஸ்தாபம்
**விருச்சிகம்** : பிரயாணம், கடன் கொடுத்தல், நீண்டநாள் நண்பர் சந்திப்பு
**தனுசு** : அதிக செலவு, நினைத்ததை சாதித்தல், எதிர்பாராத சந்திப்பு
**மகரம்** : தடுமாற்றம், குடும்பக் கலகம், பிறரிடம் உதவி கேட்டல்
**கும்பம்** : யோசனை மிகுதி, பயனற்ற செய்கை, வீண் பழி கேட்டல்
**மீனம்** : தொழில் சிரமம், மற்றவர்களுக்கு உதவுதல், உடல்நிலை பாதிப்பு

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்


# அராலியில் குழு மோதல் இரண்டு பேர் படுகாயம்

யாழ். அராலிப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை 8.30 மணியளவில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் மாலை 8.30 மணியளவில் அரியாலை பகுதியில் போதையிலிருந்த இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் கருத்துமோதல் ஏற்பட்டு கைகலப்பில் முடிவடைந்துள்ளது. போதையில் கெடையொன்றுக்கு சென்று அங்கு தகராறில் ஈடுபட்ட இளைஞர் குழுவிற்கும், அதனைத் தட்டிக்கேட்க சென்ற மற்றுமொரு இளைஞர் குழுவுக்குமிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இம்மோதலில் இரும்பு கம்பி தாக்குதலுக்குள்ளான இரு இளைஞர்கள் தற்சமயம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கோப்புகளின் அளவை சிறிதாக்க

தகவல்தொழில்நுட்பத்தில் கணினி சார்ந்த கோப்புகள் மற்றும் தரவுகள் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். நமது தேவைக்கேற்ப கோப்புகளின் அளவும், வடிவங்களும் மாறுபடுகின்றன.

உதாரணமாக MS document, Flash, Photoshop, videoகோப்புகளைக் கூறலாம்.

இவ்வாறான கோப்புகளை நம் கணினியில் சேமித்து வைக்க வேண்டிய கட்டாயமும் உள்ளது. கோப்புகளைச் சேமித்துவைக்க கடந்த பதிவில் கூறியுள்ளபடி, குறுவட்டுகள் முதல், Pendrive, Memory card மற்றும் Computer Hard Disk கள் வரை அனைத்தையும் நாம் பயன்படுத்துகிறோம்.

இவை அனைத்துமே குறிப்பிட்ட கொள்ளளவு (capacity) கொண்டவே.. அளவில்லாமல் சேமிப்பதற்கான சாதனங்கள் இதுவரை கண்டுபிடிப்படவில்லை. இணையத்தில் கூட கோப்புகளை சேமித்து வைக்கலாம் என்றாலும் கூட, அங்கும் குறிப்டிபிட்ட கொள்ளளவு மட்டுமே பயன்படுத்தும் வகையில் அமைத்துள்ளனர்.

இதுபோன்ற கட்டுப்பாடுகள் நிறைந்த கோப்புகள் சேமிப்பகத்தில் நம்மால் நாம் விரும்பியபடி அனைத்து கோப்புகளையும் சேமித்து வைக்க இயலாமல் போய்விடுகிறது. ஆனால் இதற்கு ஒரு மாற்றுவழி உண்டு.

அதாவது, பெரிய அளவுள்ள கோப்புகளை சுருக்கி அவற்றைச் சேமித்துக்கொள்ளும் தொழில்நுட்பம் ஆகும்.

இத்தொழிற்நுட்பத்திற்கு ஃபைல் ஜிப்பிங் (File Zipping) அல்லது Compressing என்று பெயர்.

இத்தொழில்நுட்பம் சாதாரணமாக நம் கணினியிலே இணைக்கப்பட்டிருக்கும். விண்டோஸ் இயங்குதளங்களைக் கொண்ட கணினிகளில் இவ்வசதியை நாம் காண முடியும். ஒரே நேரத்தில் பல கோப்புகளை இணையத்தினூடே அனுப்புவதற்கு இவ்வசதியைப் பயன்படுத்தலாம். ஆனால் இதன் மூலம் குறிப்பிட்ட அளவுள்ள கோப்புகளை மட்டுமே சுருக்கி அனுப்ப முடியும்.

ஆனால் பெரும்பாலான கணினிப் பயனர்கள் தரவுகளைச் சுருக்க, Win RaR, 7zip போன்ற மென்பொருள்களைப் பயன்படுத்தியே கோப்புகளை சுருக்கிப் பயன்படுத்துகின்றனர். இம்மென்பொருளும் நமது தேவைகளுக்கேற்ப பெரியளவில் ஒன்றும் கோப்புகளை Data Encryption செய்வதில்லை.

ஒரு சில குறிப்பிட்ட மென்பொருள்கள் கோப்புகளின் கட்டமைப்புகளில் (File Structure) மாற்றங்கள் செய்வதன் மூலம் 10GB அளவுள்ள கோப்பை 10MB குறைந்த அளவாக சுருக்கிவிடுகிறது. இத்தகைய சிறப்பு மிக்க மென்பொருள்தான் KGB Archiver.

KGB Archiver மென்பொருள் முற்றிலும் இலவசம். இது திறமூலவகை (Open Source) மென்பொருள் என்பதால் பயன்படுத்துவது மிக எளிது.
இம்மென்பொருளின் தரவு சுருக்க செயல்பாடானது PAQ6 என்ற முறைமையில் இயங்குகிறது. KGB Archiver மென்பொருள் என்கிற மிக சக்திவாய்ந்த தரவு சுருக்க முறையை கையாள்கிறது. தரவுகளை பைனரி (Binary) தொகுதிகளாக மாற்றி சேமிக்கிற முறையை பயன்படுத்துகிறது. இது விண்டோஸ் மற்றும் லினக்ஸ் வகை இயங்குதளங்களில் வேலை செய்யக்கூடிய வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இம்மென்பொருளைக் கொண்டு, கோப்புகளைச் சுருக்கும்போது மென்பொருள் அதிவேகமாக செயல்பட்டு, கோப்புகளை சுருக் கித் தருகிறது. இம்மென்பொருளில் ஒரு சிறிய குறை என்னவென்றால் கோப்புகளை மீண்டும் விரித்துப்பெற இதே மென்பொருளையே மற்றவர்கள் பயன்படுத்த வேண்டும் என்பதுதான். அதாவது இம்மென்பொருள் மூலம் சுருக்கப்பட்ட கோப்புகளை மீண்டும் விரித்துப்பெறுவதற்கு இதே மென்பொருள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இதில் High, Maximum, normal, low, very weak போன்ற முறைகளில் கோப்புகளைச் சுருக்க வழிமுறைகள் காணப்படுகின்றன. இம்மென்பொருளை நிறுவ உங்கள் கணினியில் 256 MB Ram மற்றும் 1.5 Ghz Processor ஆகிய குறைந்தளவு வன்பொருள் இருந்தாலே போதுமானது.

மென்பொருளுக்கான தரவிறக்கச்சுட்டி:
http://sourceforge.net/projects/kgbarchiver/







சமூக வலைத் தளங்கள் மத்தியில் ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட பாவனை யாளர்களை தன்னகத்தே கொண்டு அசைக்க முடியாத அரசனாக பேஸ்புக் திகழ்கின்றது.

இத்தளமானது HTC நிறுவனத்து டன் இணைந்து தனது உற்பத்தி யில் உருவாக்கப் பட்டு வரும் கைப் பேசிகளை அறிமுகப்படுத்துவதற்கு தயாராகி வருகின்றது.

Opera UL எனும் பெயரைத் தாங்கி வரவுள்ள இக்கைப்பேசிகள் Android 4.1.1a Gelly Bean இயங்குதளத்தினைக் கொண்டுள்ளதாக அமைக்கப்பட்டுவருகின்றது. இதவிர இக்கைப்பேசிகள் 1280 x 720 Pixels Resolution கொண்ட HD தொடுதிரையினை உள்ளடக்கியதாகவும், 1.4GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor-னையும் கொண்டுள்ளது.

மேலும் இக்கைப்பேசிகளில் Adreno 305 graphic தொழில்நுட்பமும் உள்ளடக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




ஒரே நேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட மின்னஞ்சல்களுக்கு பதில் அனுப்புவது கூகுளின் ஜிமெயில் சேவையில் சாத்தியமாகியுள்ளது. இதற்காக Batch Reply for Gmail எனும் பிரத்தியேகமான கூகுள் குரோம் நீட்சி ஒன்றினை நிறுவிக்கொள்ள வேண்டும்.

## விண்டோஸ் 8 இயங்குதளத்திற்காக புதிய மொனிட்டரை களமிறக்கும் LG



மைக்ரோசாப்ட் நிறுவனம் தனது புதிய இயங்குதளமான விண்டோஸ் 8-ஐ சமீபத்தில் அறிமுகப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து பல நிறுவனங்கள் புதிய விண்டோஸ் 8 இயங்குதளத்தில் இயங்கும் புதிய சாதனங்களை அறிமுகப்படுத்திகொண்டிருக்கின்றன. அந்த வகையில் தற்போது விண்டோஸ் 8 இயங்குதளத்திற்காக புதிய மொனிட்டரை LG களமிறக்கி உள்ளது.

இந்த புதிய மொனிட்டருக்கு Touch 10 Monitor என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. 23 அங்குல அளவில் வரும் இந்த மொனிட்டரை 10 விரல்களாலும் இயக்கக்கூடிய வகையில் Multi Touch வசதி உள்ளது. Multi Touch வசதி கொண்ட இந்த புதிய பெரிய மொனிட்டர் இதைப் பயன்படுத்துவோருக்கு ஒரு புதிய அனுபவத்தைத் தரும் என்று LG-இன் துணை இயக்குனர் ஜே.ஜே. லீ கூறியிருக்கிறார்.

இந்த திரையில் கீபோர்டு உள்ளதால் இந்த மொனிட்டரிலேயே 10 விரல்களாலும் டைப் செய்ய முடியும். மேலும் இந்த மொனிட்டர் Music Application-களையும் கொண்டிருக்கிறது. இந்த பெரிய மொனிட்டரில் திரைப்படங்கள் பார்ப்பது மற்றும் வீடியோ கேம் விளையாடுவது ஆகியவை பரவசத்தைக் கொடுக்கும் என்று நம்பலாம்.

அடுத்த மாதம் இந்த மொனிட்டர் கொரியாவில் களமிறங்க இருக்கிறது. அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் மற்றும் மற்ற நாடுகளுக்கும் விற்பனைக்கு வரும் என்று தெரிகிறது.




இன்று தரவுகளை சேமித்து வைக்க நாம் பல்வேறு சாதனங்களைப் பயன்படுத்துகிறோம். உதாரணமாக Memory Card, USB என்று சொல்லக்கூடிய Pendrive, குறுவட்டு(DVD), நெகிழி (CD) போன்றவைகளைக் கூறலாம்.

இவற்றில் மெமரி கார்ட், USB போன்றவற்றை பெரும்பாலும் தற்காலிகமாக தரவுகளை சேமிக்க மட்டுமே பயன்படுத்துவோம்.

நீண்ட நாட்கள் பயன்படுத்தும் வகையில் நிரந்தரமாக தரவுகளை சேமித்து வைக்கப் பயன்படுத்துவது CD, DVD போன்றவைகளே.

இவற்றில் நீண்ட நாட்கள் தகவல்களை சேமித்துப் பயன்படுத்துவதற்கு CD-R /+R அல்லது DVD-R/+R போன்ற சேமிப்பு வட்டுகளைப் பயன்படுத்த வேண்டும். ரீரைட்டபிள் (RW ) CD என்று சொல்லக்கூடியவைகளை கண்டிப்பாக பயன்படுத்தக் கூடாது.


நீங்கள் தரவுகளை சேமித்து வட்டுக்களை அவற்றிற்குண்டான உறைகளில் வைத்து பாதுகாத்திட வேண்டும். தரவுகளை சேமித்த வட்டுகளில் உள்ள அடிப் பகுதியை குப்பை, தூசிகள் படியாதவாறு மெலிதான பருத்தி அல்லது மிருதுவான பட்டுத் துணியைப் பயன்படுத்தி லேசாக துடைத்து சுத்தம் செய்யலாம்.

எப்பொழுதும் ஒரு தரவை இரண்டு CDக்களில் நகல்களாக எடுத்து வைப்பது சிறந்தது. ஒரு வட்டில் உள்ள தகவல்கள் பாதிப்பு ஏற்பட்டால் கூட மற்ற சிடியிலிருந்து தகவல்களை நாம் மீட்டெடுக்கலாம்.

வட்டுகளின் கொள்ளளவும், திறனையும் குறிக்கும் சொற்கள்:

Gold - என்று குறிப்பிட்ட வட்டுகளை சுமாராக 300 வருடங்கள் வரை பாதுகாத்து வைத்திட முடியும். மிகச்சிறந்த தரமான வட்டு இது. Gold or Silver, Silver என்று குறிப்பிடப்பட்டுள்ள வட்டுக்கள் தரம் குறைந்தவை. எனினும் இவைகள் Reflective Layer களால் உருவாக்கப்பட்டது.

Phathalo Cyanine. இந்த குறுந்தட்டு மிகச்சிறந்த ஒன்று. யுணுழு, ஊலயனைநெ போன்றவைகள் சற்று தரத்தில் குறைந்தவை. தகவல்களை, தரவுகளை சேமிக்க நாம் முறையாக இக்குறுவட்டுகளைப் பற்றி அறிந்து, அதற்கேற்றார்போல் அந்த குறுவட்டுக்களில் தகவல்களை சேமித்துப் பயன்படுத்தவேண்டும். தகவல்களின் முக்கியத் தன்மைக்கு ஏற்ப நீங்கள் குறுவட்டுகளை தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள்.




உணவு அளவில் ஒரு மாறுதல் என்று சொல்லலாமே தவிர, உணவு அளவில் குறைவு என்று ஸ்க்வீலர் தவறியும்கூட சொல்லவில்லை. ஆனால் ஜோன்ஸின் நாட்களில் இந்த மாறுதல் கால அளவ உணவுகூட மிருகங்களுக்கு கிடையாது என்று பல புள்ளி விபரங்களைக் கொண்டு நிரூபித்தது.

ஸ்க்வீலர் பன்றி. மிக வெகு வேகமாக கீச்சுக் குரலில் புள்ளிகளை மிருகங்களுக்கு வாசித்துக் காட்டியது ஸ்க்வீலர். கொள்ளு, வைக்கோல், பீட்ரூட், கரட் போன்ற உணவுகள் எல்லாம் ஜோன்ஸின் நாட்களில் கிடைத்ததைப் போல இரண்டு பங்கு இப்போது கிடைக்கிறது என்று ஸ்தாபித்தது ஸ்க்வீலர். ஜோன்ஸ் காலத்தைவிட இப்போது குறைவாகவே விலங்குகள் வேலை செய்கின்றன என்றும், பண்ணையில் ஈக்கள் முதலியவற்றின் தொல்லைகள் குறைந்துவிட்டன என்றும், குடிதண்ணீர் முன்னைவிட நல்லதாக இருக்கிறது என்றும், மிருகங்களின் ஆயுள் அதிகரித்துவிட்டது என்றும், அவற்றின் குட்டிகள் சௌக்கியமாகக் குழந்தைப் பருவத்தைத் தாண்டி உயிர்வாழ்கின்றன என்றும், படுக்க வைக்கோலும் அதிகமாகக் கிடைக்கிறது என்றும் ஆணித் தரமாக மறுக்க முடியாதபடி சொல்லியது ஸ்க்வீலர்.


மிருகங்கள் எல்லாம் ஒவ்வொரு வார்த்தையையும் நம்பின. உண்மையைச் சொல்லப் போனால் ஜோன்ஸையோ, ஜோன்ஸின் காலத்து வி'யங்களையோ அவற்றிற்கு அடியோடு மறந்து போய் விட்டன. இப் போது, வாழ்க்கை கடினமாகவும் திருப்தியற்றதாகவும் உற்சாக மற்றதாகவும் இருக்கிறது என்பதை மட்டுமே அவை உணர்ந்தன.

தற்போது அவை அடிக்கடி பசியுடனும் குளிருடனும் போராட வேண்டியிருந்தது. தூங்காத நேரமெல்லாம் இப்போது அவை ஓயாமல் உழைத்துக் கொண்டிருந்தன. அவ்வளவுதான் அவற்றிற்குத் தெரிந்த விஷயம்.. ஜோன்ஸ் காலத்தில் இன் னும் மோசமாகத்தான் இருந்திருக் கும். அப்படி நம்ப அவை தயாராகவும் இருந்தன. அப்படி நம்புவதில் ஒரு உற்சாகம் கொண்டன அவை. தவிரவும் அந்தக் காலத்தில் விலங்குகளெல்லாம் மனிதனுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தன.

இப்போது அவை சுதந்திரம் பெற்றுவிட்டன. அது பெரிய முக்கியமான விஷயமல்லவா? இந்த முக்கியமான வித்தியாசத்தை அடிக்கொருதரம் ஸ்க்வீலர் சுட் டிக்காட்டத் தயங்கவில்லை. தவிர வும் இப்போது விலங்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்திருந்தது. இலையுதிர் காலத்தில் சற்றேறக்குறைய ஒரே சமயத்தில் நான்கு பெண் பன்றிகளும் குட்டிகள் போட்டன. அவைகள் முப்பத்தொரு குட்டி கள் போட்டன. பிறந்த குட்டிகள் கரும்புள்ளியும் வெள்ளைப் புள்ளியுமாக இருந்தன. பண்ணையிலே நெப்போலியனைத் தவிர வேறு ஆண் பன்றிகள் இல்லையாதலால் இந்தக் குட்டிகளின் தகப்பன் யார் என்பது பற்றிச் சந்தேகத்துக்கு இடமேயில்லை, சுண்ணாம்புக் கல்லும் வாங்க வசதி ஏற்பட்டவுடன் பண்ணை வீட்டுத் தோட்டத்திலே ஒரு பள்ளிக்கூடம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தற்காலிகமாக பன்றிக் குட்டிகளுக்கும் நெப்போலியனே பாடம் சொல்லித் தந்தது.

(நாளை)

## வரைவோம் வாருங்கள்!



## வௌவாலின் வாழ்வு – டால்ஸ்டாய்



ஒரு காட்டில் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் பலத்த போர். காடு யாருக்குச் சொந்தமென்று. ஒரு கட்டத்தில் விலங்கினங்கள் ஜெயிக்கிற மாதிரி ஒரு சூழல் வருகிறது. பறவைக்கூட்டத்தில் இருந்த வௌவால் இதைக் கணிக்கிறது. உடனே பறந்து விலங்கின் கூட்டணியில் தன்னை இணைத்துக் கொள்ள நினைக்கிறது.

வௌவாலைத் தடுக்கிற பறவைக்கூட்டணி. "நீ செய்வது நியாயமா" என்று கேட்கிறது.

பறவைக்கூட்டணி தன்னைப் பார்த்து அவ்வாறு கேட்டதும் வௌவால் சொன்னது: "நானென்ன உங்களைப் போல முட்டையிட்டு குஞ்சு பொரிக்கிறேனா? நான் குட்டியிட்டு பாலூட்டுகிறேன். பாலூட்டுவதால் நான் விலங்கினம்" என்று சொல்லிவிட்டு விலங்குக் கூட்டணியில்" ச்சே. கூட்டத்தில் சேரப் பறந்தோடியது. போரில் வெல்ல எவர் வந்து கூட்டத்தில் சேர்ந்தாலும் சேர்த்துக் கொள்வோமென விலங்கினமும் வௌவாலைச் சேர்த்துக் கொண்டது.

போர் தொடர்ந்தது. இரு தரப்பும் சம பலத்தில் இருக்க, இப்போது பறவையினம் ஜெயிக்கிறாற்போல ஒரு தோற்றம். பயந்தது வௌவால். சடாரெனப் புறப்பட்டது பறவைக் கூட்டத்தில் சேர. தடுத்த விலங்கினத்திடம் கூறியது: "நானென்ன உங்களைப் போல நாலு காலால் நடக்கிறேனா? இதோ பாருங்கள்.. இறக்கை இருக்கிறது.. பறக்கிறேன். பறப்பதால் நான் பறவையினம்!" என்று சொல்லிவிட்டுப் பறந்தது. கூட்டணி தர்மத்தில் பறவையினமும் வௌவாலைச் சேர்த்துக் கொண்டது!

மீண்டும் பல நாட்கள், வாரங்கள், மாதங்கள் போர் தொடர்ந்தது. பொறுத்துப் பார்த்த வனதேவதை சடாரென இரண்டு தரப்பினரின் முன்பும் தோன்றினாள்.

"இதோ பாருங்கள்! இந்தக் காடு உங்கள் இருவருக்கும் சொந்தமானதல்ல. அப்படி ஓர் எண்ணமிருந்தால் அதை மூட்டை கட்டி வையுங்கள். இந்தக் காடு எனக்குச் சொந்தம். இதில் நீங்கள் இருக்க வேண்டுமானால் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். இந்த இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். இப்படி சண்டையிடுவீர்களேயானால் இப்போதே இந்தக் காட்டை விட்டு வெளியேறுங்கள்" என்றது கண்டிப்பான குரலில்.

வனதேவதையின் உக்கிரத்தைக் கண்ட விலங்கினமும், பறவையினமும் தங்கள் போரை நிறுத்திக் கொள்வதென தீர்மானித்தன. போரை வாபஸ் வாங்கிக் கொண்டு ஒற்றுமையாக காட்டின் நலனுக்காக உழைப்பது என முடிவெடுத்தன.



இப்போது திண்டாடியது வௌவால். பறவையினம் "நீ என்ன எங்களைப் போல முட்டையிட்டா குஞ்சு பொரிக்கிறாய்? போ.. போ.. விலங்குகளுடனே வாழ்" என்று துரத்த விலங்கினமோ "நீ இறக்கையெல்லாம் வைத்துக் கொண்டு பறக்கிற பறவையல்லவா.. போ.. போ! பறவைக் கூட்டத்தில் சென்று வாழ்" என்று துரத்தின.


சந்தர்ப்பத்திற்காக மாறி மாறி கூட்டுச் சேர முற்பட்டதால் இரண்டு புறமும் சேர முடியாத வௌவால், அவமானத்தால் பகலில் தலைகாட்ட இயலாமல் பகல் முழுதும் தலைகீழாகத் தொங்கி இரவு மட்டுமே இரை தேடி, உண்ணும் வாய் வழியாகவே மலமும் கழிக்கிற அவல நிலைக்கு ஆளானதாம்!

## சிறுவர் அமுதம்

### இரண்டா ஒன்றா?

இரண்டு கால்கள் எதற்காக?
என்றும் விரைவாய்
நடப்பதற்கு!
இரண்டு கைகள் எதற்காக?
என்றும் வேலை செய்வதற்கு!
ஏனோ நாக்கை வாயை
மட்டும்
இரண்டாய் இறைவன்
வைக்காமல்
ஏனோ ஒன்றாய்த் தந்தானோ?
இதன்பொருள் என்ன
அறிவாயா?
இரண்டு விதமாய்ப் பேசாமல்
என்றும் உண்மை பேசிடத்தான்
இரண்டாய் அவற்றைப்
படைக்காமல்
இறைவன் ஒன்றாய்த்
தந்துள்ளான்!
இரண்டு கண்கள் பார்த்தாலும்
இரண்டும் பார்ப்பது
ஒன்றைத்தான்
இரண்டு பேச்சுப் பேசாதே
என்றும் உண்மை
ஒன்றேதான்

### தன்னம்பிக்கை



தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை, உள்ளே இருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும். அளவு கடந்த ஆற்றலை வெளிப் படுத்தப் போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாதபோதுதான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ, ஒரு நாடோ தன்னம்பிக்கை இழந்தவுடனே அழிவு வருகிறது.

- **விவேகானந்தர்**

**சுடோக்கு எண் 87 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 2 | 1 | 4 | 5 | 9 | 6 | 8 |
| 1 | 4 | 6 | 2 | 9 | 8 | 5 | 7 | 3 |
| 5 | 8 | 9 | 3 | 7 | 6 | 1 | 2 | 4 |
| 4 | 6 | 5 | 7 | 3 | 2 | 8 | 1 | 9 |
| 2 | 9 | 3 | 8 | 5 | 1 | 6 | 4 | 7 |
| 8 | 1 | 7 | 9 | 6 | 4 | 3 | 5 | 2 |
| 9 | 3 | 1 | 5 | 2 | 7 | 4 | 8 | 6 |
| 6 | 2 | 8 | 4 | 1 | 3 | 7 | 9 | 5 |
| 7 | 5 | 4 | 6 | 8 | 9 | 2 | 3 | 1 |

**சுடோக்கு எண் 88**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 5 | | 2 | 3 |
| 8 | | | | 9 | 1 | | | |
| 1 | | | | 2 | | | 7 | |
| 9 | | | | 5 | | | 3 | |
| | 3 | | | | | | 9 | |
| | 1 | | | 7 | | | | 4 |
| | 7 | | | 1 | | | | 6 |
| | | | 6 | 3 | | | | 7 |
| 5 | 9 | | 8 | | | | | |

# வறிய மக்களுக்கு தென்னங் கன்றுகள்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் வறிய மக்களுக்குக் கிராம அலுவலர்களூடாக தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வறிய மக்கள் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா இரண்டு தென்னங் கன்றுகள் வீதம் வழங்கப்பட்டன. ஒரு கிராம அலுவலர் பிரிவில் 25 குடும்பங்களுக்கு 50 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

# ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் பிள்ளைகள் பாடசாலையிலிருந்து விலகல்

பாடசாலை மாணவர்களின் இடை விலகளை குறைப்பதற்கான விசேட திட்டம் ஒன்றை கொண்டு வரவுள்ளதாக கல்வியமைச்சர் பந் துல குணவர்தன கூறியுள்ளார்.

இலங்கையில் ஆண்டுதோறும் 200,000 பிள்ளைகள் பாடசாலையிலிருந்து இடைவிலகுவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் திணைக்களம் கூறியுள்ளது.

"அறிவு அடிப்படையான பொருளாதாரம்" என்ற இலட்சியத்தை அடைவதற்கு பிள்ளைகள் தமது பாடசாலை கல்வியை முழுமையாக பூர்த்தி செய்வது அவசியமான நிபந்தனையாகும்" என அமைச்சர் கூறினார்.

"உலக வங்கி நிதி வழங்கும் கல்வியின் பண்பு தரத்தை முன்னேற்றும் திட்டத்தினூடாக தரம் 11 வரையான பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகுவது குறைக்கப்படும்" என அமைச்சர் கூறினார்.

"பாடசாலையை விட்டு விலகியுள்ளவர்களுக்காக 3000 குறுங்கால தொழில் பயிற்சி பாடநெறிகளும், சுற்றுலாத்துறை வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய 1800 பயிற்சி திட்டங்களும் நடத்தப்படவுள்ளன" என அவர் கூறினார்.

# அரியாலையில் கத்தி வெட்டு

வலிகாமம்

அரியாலையில் அயலவர்களுக்கு இடையே ஏற்பட்ட பகைமை கத்தி வெட்டில் முடிவடைந்துள்ளது. இதன் காரணமாக ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரு பகுதியினருக்கு இடையே நீண்டகாலமாக பகைமை இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக கடந்த 30 ம் திகதி இருவரும் சண்டையிட்டதாகவும் அதனைத் தொடர்ந்து ஒருவர் கத்தி வெட்டுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சந்தேக நபர் தலைமறைவாகி உள்ளதாகவும் இவர் மன்னார் மாவட்டத்திற்கு தப்பிச் சென்றுள்ளதாகவும் சந்தேக நபரை கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

# சிறுமியுடன் சில்மிஷம் இளைஞன் கைது

வலிகாமம்

பாடசாலை சிறுமியுடன் தகாத முறையில் நடந்து கொள்ள முற்பட்ட இளைஞர் வல்வெட்டித்துறை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பகுதியில் உள்ள 15 வயது சிறுமியுடன் தகாத முறையில் நடந்து கொள்ள இளைஞர் ஒருவர் முற்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக சிறுமி தனது பெற்றோர்களுக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து பொலிசார் அதே இடத்தைச்சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததைத் தொடர்ந்து சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# ஆஸியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட 26 பேருக்கும் விளக்கமறியல்

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட போது கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட 26பேரை எதிர் வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதவான் டப்ளியூ.டே.துலானி எஸ்.வீரதுங்க உத்தரவிட்டார்.

திருகோணமலை, தெவுந்தர மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, பேருவளை, தெவுந்தர ஆகிய பிரதேசங்களிலிருந்து சாந்த ஜுட், சயூரி, ராஜா என்ற பெயர்களைக் கொண்ட ரோலர் படகுகளில் சட்டவிரோதமாக இவர்கள் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அவுஸ்திரேலிய கரையோர பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட இவர்கள், கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைத்து திருப்பி அனுப்பப்பட்ட நிலையில் வியாழக்கிழமை இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.




வலி. வடக்கு பிரதேச சபையின் தலைவரும் மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவருமான அமரர் ஸ்ரீபாஸ்கரனின் 13 வது நினைவு நாள் நிகழ்வு மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் இடம் பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வைப் படத்தில் காணலாம். (வலிகாமம் முகவர்)

# கோப்பாயில் திருடியவர் சரணடைந்தார்

வலிகாமம்

கோப்பாய் பொலிஸ் பகுதியில் கடந்த வாரம் இடம் பெற்ற சுமார் ஏழரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டு சம்பவம் சம்பந்தமாக ஒருவர் கோப்பாய் பொலிசில் சரணடைந்துள்ளதுடன் மற்றொருவர் பொலிசாரினால் தேடப்பட்டு வருகின்றார்.

கடந்த வாரம் கோப்பாய் பகுதியில் உள்ள வீடொன்று உடைக்கப்பட்டு பொருட்களும் களவாடப்பட்டு இருந்தன. இந்நிலையில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் தானாக வந்து கோப்பாய் பொலிசில் சரணடைந்துள்ளார்.

மற்றும் குறிப்பிட்ட திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் சம்பந்தமாக விபரங்கள் பெறப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட நபர் தலைமறைவாக உள்ளதினால் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

# ஏ9 பாதை மூடிய காலத்தில் உதவிய ஜெற்லைனர் இந்தோனேசிய உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படும்

இலங்கையின் நான்காம் கட்டப் போரில், இலங்கைப் படைகளுக்கு பெரிதும் உதவியளித்த ஜெட்லைனர் துருப்புக்காவி கப்பல் இன்று இறுதிப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. 2006ம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்பட்ட இந்தக் கப்பலை 6 ஆண்டுகளுக்கு பின்னர், கைவிடுவதற்கு இலங்கை கடற்படை முடிவு செய்துள்ளது.

போர் உச்சக்கட்டத்தை எட்டியிருந்த போது, இந்தோனேசிய நிறுவனம் ஒன்றிடம் இருந்து இந்தக் கப்பல் குத்தகைக்கு பெறப்பட்டிருந்தது.

3000 படையினரை ஒரே நேரத்தில் ஏற்றிச் செல்லும் வசதிகளைக் கொண்ட இந்தத் துருப்புக் காவிக் கப்பல், போரின் போது வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில், இலங்கைப் படையினரையும் பொருட்களையும் விரைவாக இடம் நகர்த்துவதற்கு பெரிதும் உதவியாக இருந்து வந்தது.

கடற்புலிகளின் கரும்புலித் தாக்குதல் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், திருகோணமலையில் இருந்து இந்தக் கப்பல் வாரத்துக்கு மூன்று தடவைகள் காங்கேசன்துறைக்கு, படையினரையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டது.

யாழ். குடாநாட்டின் மீதான புலிகளின் முற்றுகையை இலங்கைப் படையினர் உடைப்பதில் இந்த துருப்புக்காவி முக்கிய பங்கு வகித்திருந்தது. இந்தக் கப்பலை இலங்கை கடற்படை திருப்பி அனுப்புவதற்கான காரணம் இதனை பாமரிப்பதற்கு பெருமளவில் ஏற்படும் செலவினமே என்று கூறப்படுகிறது. நேற்றுக் காலை இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து இறுதிப் பயணத்தை மேற்கொள்ளும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

# உத்தியோகத்தர்கள் பாரிய சம்பள அதிகரிப்பு இல்லை ஆனால் விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும்

அரச பணியாளர்கள் இந்த முறை வரவுசெலவுத் திட்டத்தில் பாரிய சம்பள உயர்வை எதிர்பார்க்க முடியாது எனறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சர் பசில் ராஜபக்ச இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். எனினும் விதை மானியம் மற்றும் சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடுகள் உரியமுறையில் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானில் இருந்து எரிபொருள் இறக்குமதி தடை உட்பட்ட பல வழிகளிலும் இலங்கை நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த நிலையில் பாரிய சம்பள உயர்வை எதிர்ப்பார்ப்பது பொருத்தமற்றது என்று பசில் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

திவிநெகும மற்றும் புரநெகும போன்ற அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நாட்டின் சுற்றுலாத்துறை முன்னேற்றப்படும் என்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

# சிகிச்சையில் ஏற்பட்ட குளறுபடியால் மட்டக்களப்பில் பெண் உயிரிழப்பு:

மட்டக்களப்பு பழுகாமத்தில் இருந்து கையுடைவு காரணமாக மட்டு. போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவந்த குடும்ப பெண்ணொருவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சையில் ஏற்பட்ட குழறுபடி காரணமாக உயிரிழந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பழுகாமத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான 30 வயதுடைய சிவனேசன் சிவகலா மிகவும் வறுமை நிலையில் உள்ளவர்.

குறித்த பெண் கடந்த புதன்கிழமை வீட்டில் வழுக்கி விழுந்தால் அவரது கை மணிக்கட்டுப் பகுதியில் ஏற்பட்ட பாரிய அடி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், மறுநாள் வியா ழக்கிழமை அவருக்கு கை மணிக் கட்டுப் பகுதியில் சத்திர சிகிச்சை செய்யவென அழைத்துச் செல் லப்பட்டுள்ளார்.

சத்திரசிகிச்சையின்போது குறித்த பெண் உயிரிழந்துள்ளார். சத்திர சிகிச்சையின்போது இடம்பெற்ற சில பிழையான சிகிச்சை காரணமாகவே குறித்த பெண் உயிரிழந்திருக்கலாம் என குடும்பத்தினரால் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உள்ள பொலிஸ் காவலரணில் தெரிவிக்கப்பட்டதையடுத்து இது தொடர்பில் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, நேற்று நீதிபதி மரண விசாரணையை மேற்கொண்டதுடன் உயிரிழப்பில் சந்தேகம் நிலவுவதால் விசேடமாக கொழும்பில் இருந்து பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியர்களை வரவழைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவித்தன.

# பத்திரிகைகள் மூலம் நோய் தொற்றும் அபாயம்

## பிரிட்டன் சுகாதார மையம் எச்சரிக்கை

மருத்துவமனைகளில் உள்ள பத்திரிக்கைகளின் மூலம் தொற்று நோய் பரவும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

தனியார் மருத்துவமனையில் மருத்துவர்களை பார்ப்பதற்காக காத்திருக்கும் நேரத்தில், வரவேற்பு அறைகளில் பத்திரிக்கைகளை வைத்திருப்பார்கள்.

நோயாளிகள் பலரும் இதனை தொட்டு படிப்பதால், பலருக்கும் நோய் தொற்றும் அபாயம் உள்ளதாக பிரிட்டனின் தேசிய சுகாதார மைய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

பிரிட்டனின் டோர்செட் மாவட்டத்தில் லைம்ரெஜிஸ் பகுதியில் உள்ள பல் மருத்துவமனை ஒன்றில் கடந்த 2004ஆம் ஆண்டு வெளியான பத்திரிக்கைகள் நோயாளிகள் படிப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற பழைய பத்திரிக் கைகளின் மூலம் பறவை காய்ச்சல், பன்றி காய்ச்சல் போன்றவை வரக்கூடும். எனவே ஒரு வாரத்திற்கு உட்பட்ட பத்திரிக்கைகளை மட்டுமே வைக்கும் படி, மருத்துவமனைக்கு பிரிட்டன் சுகாதார மையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

# மிட் ரோம்னியை கிண்டலடிக்கும் ஒபாமா


அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஒரு நாளே உள்ள நிலையில், தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வருகிற 6ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் பராக் ஒபாமாவும், குடியரசு கட்சி சார்பில் மிட் ரோம்னியும் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில் ஓஹையோ மாகாணம் ஸ்பிரிங்ஃபீல்டு, லிமா உள்ளிட்ட நகரங்களில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் ஒபாமா பேசுகையில்,

ஆளுநர் மிட் ரோம்னி ஒரு சிறந்த விற்பனைப் பிரதிநிதி. எனவே அவர் ஏற்கெனவே தோற்றுப் போன சிந்தனைகளையும், கொள்கைகளையும் இப்போது மறுவிற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

அமெரிக்க ஜீப் மற்றும் வாகனத் தயாரிப்பு நிறுவனங்கள் சீனாவில்தான் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று ரோம்னி பிரசாரம் செய்துள்ளார். அது உண்மையல்ல.



ஓஹையோ மாகாணத்தில் ரோம்னிக்கு சிக்கல் காத்திருக்கிறது. ஏனெனில், அவர் இங்கு ஆட்டோமொபைல் தொழிலைக் காப்பாற்றுவதற்கு எதிராக உள்ளார்.

இங்கு இத்தொழில் எட்டு பேரில் ஒருவருக்கு வேலைவாய்ப்பை அளித்து வருகிறது. எனவே, அது அவருக்குப் பிரச்சினையாகவே இருக்கும்.

நான் அமெரிக்காவில் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவர முயற்சித்து வருகிறேன். முப்படைகளின் தலைமைத் தளபதியாக நான் இருக்கும் வரை, நமது எதிரிகளை வலிமையான இராணுவத்துடன் சந்திப்போம்.

எனினும், ஈராக் மற்றும் ஆப்கனில் போரை முடித்துக் கொள்ள நமது சேமிப்புகளைப் பயன்படுத்துவதற்குப் பதில் நமது கடன்களை அடைப்பதற்கும், அமெரிக்காவை மறுநிர்மாணம் செய்வதற்குமான நேரம் இது என்று தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து ஓஹையோ மாகாணத்தில் உள்ள எட்னா நகரில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் மிட் ரோம்னி பேசுகையில்,

பராக் ஒபாமா மீண்டும் புதிய வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளார். ஏற்கெனவே அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை.

அதேபோல், இந்தப் புதிய வாக்குறுதிகளையும் அவரால் நிறைவேற்ற இயலாது. தற்போது செல்லும் அந்தப் பாதையிலேயே நம்மை அழைத்துச் செல்லப் போவதாக அவர் கூறியுள்ளார். இதே பாதையில் சென்றால் நாடு கடனில் மூழ்கும் என்று எச்சரிக்கை விடுத்தார்.


# உலகின் மிகவும் பிடித்த விலங்காக புலி தெரிவு

உலகின் மிகவும் பிடித்த விலங்காக 73 நாட்டு மக்கள் இணைந்து புலியை தெரிவு செய்துள்ளனர்.

உலகம் முழுவதும் இந்திய இனம், இந்தோசீன இனம், சுபத்திரன் இனம், சைபீரியஸ் இனம், பாலி இனம், ஹாஸ்பின் இனம், ஜவான் இனம் என்ற எட்டு வகையான புலி இனங்கள் இருந்தன.

ஆனால் 1940ஆம் ஆண்டில் பாலி இனமும், ஹாஸ்பின் இனமும், 1970ஆம் ஆண்டில் ஜவான் இனமும் முற்றிலும் அழிந்தது.

ஆண்டுதோறும் பல்வேறு நாட்டு மக்களிடம் வாக்குகள் சேகரித்து உலகின் பிடித்த விலங்கினை, விலங்கியல் நடத்தை ஆய்வாளர்கள் தெரிவு செய்வர். இந்த ஆண்டு உலகின் பிடித்த விலங்காக புலி தெரிவு செய்யப்பட்டுள்ளது.



உலகின் பிடித்த விலங்கினை தெரிவு செய்ய, விலங்கியல் நடத்தை ஆய்வாளர் கேண்டிடிசா என்பவர் வாக்குச் சேகரித்தார்.

இதில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பன், சீனா உள்பட 73 நாடுகளை சேர்ந்த, 50 ஆயிரம் பேர் வாக்களித்தனர்.

வாக்கு சேகரிப்பில் 21 சதவிகித பேரின் ஆதரவோடு உலகின் மிக பிடித்த விலங்காக புலிகள் தெரிவு செய்யப்பட்டது.

20 சதவிகித ஆதரவோடு நாய் இரண்டாம் இடத்தையும், 13 சதவிகித ஆதரவோடு டால்பின்கள் மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

10 சதவிகித பேர் குதிரைக்கும், 9 சதவிகித பேர் சிங்கத்துக்கும், 8 சதவிகித பேர் பாம்புக்கும் வாக்களித்தனர். யானை, சிம்பென்ஸி, திமிங்கலத்துக்கு குறைவான வாக்குகளே கிடைத்தது.

# பெண்ணுடன் இரகசியத் தொடர்பு வைத்திருந்த ஒபாமாவின் பாதுகாப்பு படை வீரர் தற்கொலை

அமெரிக்காவின் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி சுற்றுப்பயணம் செல்லும் போது பாதுகாப்பிற்காக சிறப்புப் படை வீரர்களும் செல்வார்கள்.

சுற்றுப் பயணத்திற்காக சென்றிருக்கும் போது, இவர்கள் முறைகேடாக நடந்து கொள்கிறார்கள் என்ற புகார் எழுந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் ஜனாதிபதி ஒபாமா கொலம்பியா சென்றிருந்த போது, பாதுகாப்புக்கு சென்ற வீரர்கள் ஹோட்டலில் விபசாரியுடன் உல்லாசமாக இருந்தனர் என்ற குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக 9 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள்.


இதே போன்று ஒபாமாவின் பாதுகாப்பு படை வீரர்களில் ஒருவரான ரபேல் பிரிட்டோ என்பவர் மீதும் வெளிநாட்டு பெண்ணுடன் ரகசிய உறவு வைத்திருப்பதாக புகார் எழுந்தது.

இதுகுறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள். இதற்கிடையில் புகாரில் சிக்கிய ரபேல் பிரிட்டோ திடீரென்று தற்கொலை செய்து கொண்டார்.

இவர் சுமார் 20 ஆண்டுகளாக இந்த படைப்பிரிவில் பணியாற்றியவர் ஆவார். இவர் எங்கு? எப்படி தற்கொலை செய்து கொண்டார்? காரணம் என்ன? என்பதை பொலிசார் தெரிவிக்க மறுத்து விட்டன.

# உலக பார்வை

# மூளையே இல்லாமல் 3 வருடம் வாழ்ந்து வந்த அதிசயச் சிறுவன் திடீர் மரணம்



அமெரிக்காவில் கொலரடோவைச் சேர்ந்த ஒரு தம்பதிக்கு 3 ஆண்டுகளுக்கு முன்பு மூளை இல்லாமல் பிறந்த சிறுவன் நேற்று உயிரிழந்தான்.

கொலரடோவைச் சேர்ந்த இந்த தம்பதிகளுக்கு பிறந்த குழந்தையின் பெயர் நிகோலஸ் கோக்.

இவனுக்கு தலைப் பகுதியில் மூளை என்ற பாகமே இல்லாமல் இருந்தது.

ஆனால் இப்படி பிறக்கும் குழந்தைகள் பிறந்த ஒரு சில நொடிகளிலேயே மரணித்துவிடும். ஆனால், அந்த விதியை உடைத்து நிகோலஸ் கோக் வாழ்ந்து வந்தான்.

எவ்வித மருத்துவ உபகரணங்களும் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் அவனது சீரான உடல் இயக்கங்களுக்காக ஏராளமான மாத்திரைகளை உணவை விட அதிகமாக சாப்பிட்டு வந்தான்.

இந்நிலையில், நேற்று மூச்சுத் திணறல் காரணமாக உயிரிழந்ததாக அவனது பாட்டி தெரிவித்துள்ளார்.

அவனுடன் வாழ்ந்த வாழ்க்கை அற்புதமானது. அவன் அன்பு என்றால் என்னவென்பதையும், வாழ்க்கை என்றால் என்ன என்பதையும் கற்றுக் கொடுத்தான் என்று அவனது பாட்டி குறிப்பிட்டுள்ளார்.

உலகில் பிறக்கும் பத்தாயிரம் குழந்தைகளில் ஒருவருக்கு ஏற்படும் குறைபாடு இது என்பது குறிப்பிடத்தக்கது.




அமெரிக்காவின் ஒஹியோ மாகாணத்திலுள்ள லிமா நகரில் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் பங்கேற்க வந்த அமெரிக்க ஜனாதிபதியும் ஜனநாயக கட்சி வேட்பாளருமான பாரக் ஒபாமா கூட்டத்துக்கு இடையே குழந்தை ஒன்றை கொஞ்சி மகிழ்ந்தார்.

# காதலிக்கு ஒரு கோடி நஷ்டஈடு வழங்க ஜிம்பாப்வே பிரதமருக்கு நீதிமன்றம் உத்தரவு

ஜிம்பாப்வே நாட்டின் பிரதமர் மோர்கன் சுவான்கிர், காதலிக்கு ரூ.1 கோடி நஷ்ட ஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

மோர்கன் சுவான்கிர், லொகார் டியா கரிமாட்டுசன்கா என்ற பெண்ணை காதலித்தார்.

அவரை கடந்த ஆண்டு அதிகார பூர்வமற்ற முறையில் திருமணம் செய்தார்.




இந்நிலையில், அவர் மற்றொரு பெண்ணை கடந்த செப்ரெம்பரில் முறைப்படி திருமணம் செய்தார்.

இதை அறிந்த அவரது காதலி கரிமாட்டுசன்கா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம் பிரதமர் மோர்கன் காதலியை கழற்றி விட அவருக்கு ரூ. 1 கோடி நஷ்ட ஈடு வழங்க உத்தரவிட்டது.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டதுடன் காதலிக்கு ரூ.1 கோடி வழங்க மோர்கன் ஒப்புக் கொண்டார்.

# காங்கிரஸ் கட்சியின் அங்கீகாரம் இரத்தாகுமா?

நேஷனல் ஹெரால்டு பத்திரிகையை வெளியிட்ட நிறுவனத்திற்கு, காங்கிரஸ் கட்சி, 90 கோடி ரூபாய் கடனாக வழங்கியுள்ளதால், அந்தக் கட்சியின் அங்கீகாரத்தை இரத்துச் செய்யக் கோரி, தேர்தல் ஆணையத்தை அணுகி உள்ளார், ஜனதா கட்சித் தலைவர், சுப்ரமணிய சுவாமி. இதனால், காங்கிரஸ் கட்சியின் அங்கீகாரம் இரத்தாகுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.



முன்னாள் பிரதமர், ஜவகர்லால் நேருவால், 1937ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது அசோசியேட்டட் ஜர்னல்ஸ் லிமிடெட் இந்த நிறுவனம், நேஷனல் ஹெரால்டு என்ற ஆங்கில பத்திரிகையையும் குவாமி அவாஸ் என்ற, இந்தி பத்திரிகையையும் வெளியிட்டது. தற்போது நேஷனல் ஹெரால்டு பத்திரிகை வெளிவரவில்லை.

நேஷனல் ஹெரால்டு பத்திரிகையை வெளியிட்ட, அசோசியேட்டட் ஜர்னல்ஸ் லிமிடெட்டிற்கு, காங்கிரஸ் கட்சி, 90 கோடி ரூபாயை, வட்டி இல்லா கடனாக வழங்கியதாக, ஜனதா கட்சி தலைவர், சுப்ரமணிய சாமி, கடந்த வியாழனன்று புகார் தெரிவித்தார்.அரசியல் கட்சியான காங்கிரஸ், வர்த்தக நோக்கங்களுக்காக, கடன் கொடுக்க முடியாது என, குறிப்பிட்ட அவர், இது, தேர்தல் சட்ட விதிகள் மற்றும் வருமான வரி சட்ட விதிகளை மீறிய செயல் என்றும் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதில் அளிக்கும் வகையில், காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர், ஜனார்த்தன் திவேதி நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில், கூறியிருந்ததாவது: நேஷனல் ஹெரால்டு பத்திரிகைக்கு, வட்டியில்லா கடனாக, 90 கோடி ரூபாயை காங்கிரஸ் கட்சி வழங்கியதில், கட்சிக்கு எந்த விதமான லாப நோக்கமும் இல்லை அதனால், காங்கிரஸ் கட்சி, எந்த இலாபத்தையும் அடையவில்லை. பத்திரிகை மீண்டும் வெளிவர வேண்டும் என்பதற்காகவே, காங்கிரஸ் கட்சி உதவியது. இவ்வாறு அறிக்கையில் கூறியிருந்தார்.

# ஆடம்பரமான முறையில் அமைச்சர் மகளுக்கு திருமணம்: ஆந்திராவில் சர்ச்சை

ஆந்திராவில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் மாநில முதல்வராக கிரண்குமார் ரெட்டி உள்ளார்.


இவரது அமைச்சரவையில் மாநில போக்குவரத்து துறை அமைச்சராக பொஸ்தா சத்தியநாராயணா உள்ளார்.

இந்நிலையில் இவரது மகளும் டொக்டருமான அனுஷாவுக்கும், ரியல் எஸ்டேட் அதிபரின் மகன் சோமிக்கும் நேற்று முன்தினம் இரவு விசாகபட்டினம் அருகே மிகவும் ஆடம்பரமான முறையில் திருமணம் நடந்தது.

திருமண விழாவில் பங்கேற்பதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 300க்கும் மேற்பட்ட வி.ஐ.பிக்கள் வந்திருந்தனர்.

ஆந்திர மாநில கவர்னர் நரசிம்மன், முதல்வர் கிரண் குமார் ரெட்டி, மத்திய சுகாதார அமைச்சர் குலாம் நபி ஆசாத், தமிழக ஆளுநர் ரோசய்யா, கர்நாடகா ஆளுநர் பரத்வாஜ், எம்.எல்.ஏக்கள், எம்.பிக் கள், காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இவர்களுக்காக விசாகபட்டினத்தில் உள்ள அனைத்து நட்சத்திர ஓட்டல்களும் முன் கூட்டியே பதிவு செய்யப்பட்டிருந்தன.



வி.ஐ.பிக்களை திருமணம் நடக்கும் இடத்துக்கு வரவழைப்பதற்காக நூற்றுக்கணக்கான சொகுசு கார்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்த திருமண விழாவில் அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் இருப்பதற்காக 700 பொலிஸார், 35 டி.எஸ்.பிக்கள் உட்பட நூற்றுக்கணக்கான அதிகாரிகள் திருமணம் நடக்கும் இடத்தில் பாதுகாவலுக்கு இருந்தனர்.

திருமணத்தில் மணமக்கள் அமரும் மேடைக்காக மட்டுமே ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல் அனைவரையும் ஆச்சர்யத்தில் வாய்பிளக்க வைத்துள்ளது.

அமைச்சர் குடும்பத்தில் ஆடம்பரமான முறையில் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்து திருமணம் நடந்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# பள்ளியில் சப்தமிட்டதால் சிறுமி, சிறுவன் படுகொலை

ஜார்க்கண்ட் மாநிலம் மேற்கு சிங்பம் மாவட்டத்தில் உள்ள தொடக்க பள்ளியிலேயே இந்த கொடூரச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இப்பள்ளியில் பயிலும் குழந்தைகள் தொடர்ந்து சத்தம் போட்டு வந்த நிலையில் அவர்களின் சத்தம் அப்பகுதியைச் சேர்ந்த மதன் கோபி(வயது 35) என்பவருக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் அவர் அப்பள்ளிக் குழந்தைகள் மீது கோபத்தில் இருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று பள்ளிக்கு வந்த குழந்தைகள் வழக்கம் போல் சத்தம் போட்டுள்ளனர்.

இதனால் கடுப்பான மதன், கத்தியை எடுத்து வந்து பள்ளி வளாகத்தில் இருந்த ஜஸ்மி மர்மு என்ற 6 வயது சிறுமியைக் குத்திக் கொன்றார்.

ஆத்திரம் அடங்காத அவர், சிவாநாத் டிக்கி(வயது 10) என்ற சிறுவனின் கழுத்தை அறுத்தார்.

இதையடுத்து டிக்கி அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே மதனைப் பிடித்த பொதுமக்கள் அவருக்கு தர்ம அடி கொடுத்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

# நீலம் புயலினால் தரை தட்டிய கப்பலை சிறை பிடிக்க உத்தரவு

நீலம் புயலின் தாக்கத்தால் நிலை தடுமாறி, சென்னை பட்டினம்பாக்கம் கடற்கரையில் தரை தட்டிய பிரதிபா காவேரி கப்பல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

புயல் காற்று வீசிய சமயத்தில் கப்பலிலிருந்து உயிர் பிழைக்க தப்பிய ஐந்து பேரில், நான்கு பேரது சடலங்கள் மீட்கப்பட்டன.

ஒருவரது சடலம் மீட்கப்பட்டது. இந்நிலையில், கப்பலில் இருந்த ஊழியர்களுக்கு பல மாதங்களாக சம்பளம் தரப்படவில்லை என்றும் உயிரிழந்தவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர்நீதிமன்றம் விசாரித்தது.

அப்போது கப்பலை சிறைப் பிடித்து வைத்திருக்குமாறும் அதை செல்ல அனுமதிக்கக் கூடாது என்றும் நேற்று உத்தரவிட்டது.


இந்நிலையில், கப்பல்துறை டைரக்டர் ஜெனரல் அலுவலகம் நேற்றிரவு வெளியிட்ட செய்திக் குறிப்பில், பிரதிபா காவேரி கப்பலை பாதுகாப்பாக மீட்கும் பணி வரும் 7ஆம் திகதி தொடங்கப்படலாம் என்று தெரிவித்துள்ளது.

கப்பலின் உரிமையாளர்கள், மீட்புப் படையினர், காப்பீட்டு நிறுவனத்தினர், இழுவை இயந்திர நிறுவனத்தினர் உள்பட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்ட கூட்டத்தில், கப்பலை மீட்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய செய்திகள்

## சிவசேனா தலைவர் பால் தாக்கரே உடல் நிலை கடும் பாதிப்பு

சிவசேனா கட்சித் தலைவர் பால் தாக்கரேவுக்கு உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.



இந்தியாவின் வட மாநிலங்களில் வெகு கோலாகலமாக நடக்கும் தசரா விழாவின்போது அரசியல் தலைவர்கள் மக்கள் முன்பு, பண்டிகை கோலாகலத்தைப் பகிர்ந்து கொண்டு, நற்செய்திகள் சொல்லுவார்கள்.

அப்படி வருடாவருடம் மும்பை சிவசேனா கட்சித் தலைவர் பால் தாக்கரே மக்களை சந்தித்து உரையாற்றுவது வழக்கம்.

ஆனால் இந்த முறை மக்களை சந்திக்க முடியாதவாறு பால்தாக்கரே உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் பால்தாக்கரே, வீடியோ கான்பரன்சிங் மூலம் மக்களை சந்தித்து உரையாற்றியிருக்கிறார்.

அப்போது தனது உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும், தன்னால் நிற்கவோ நடக்கவோ முடியவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

தனக்குப் பின்னர் தன் மகனுக்கும் பேரன் ஆதித்யா தாக்கருக்கும் கூட இதேபோன்று, மக்கள் ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதை தொடர்ந்து நேற்று மும்பையில் பால்தாக்கரே மகன் உத்தவ் தாக்கரே சிவசேனா கட்சி எம்.எல்.ஏ.க்களுடன் அவசர ஆலோசனை நடத்தியுள்ளார்.

தந்தையின் உடல்நிலை சரியில்லாததினால் நடத்திய அவசரக் கூட்டமா என்று செய்தியாளர்கள் கேட்டபோது, அப்படியெல்லாம் இல்லை இது வழக்கமான கூட்டம்தான் என்று உத்தவ் தாக்கரே மழுப்பியுள்ளார்.



டில்லியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கிய முதல்வர் ஷீலா தீட்சித்.

**இந்திய மருத்துவ ஆலோசனைக்குழு**

## இரட்டை சகோதரிகளை பிரித்தால் ஒருவர் உயிருக்கு ஆபத்து

பீகார் மாநிலம் பாட்னாவைச் சேர்ந்த தலை ஒட்டிப்பிறந்த இரட்டை சகோதரிகளான சபா, பரர்வை பிரித்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படுமென இந்திய மருத்துவ ஆலோசனைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தொடக்கத்தில் இவர்களை தனித் தனியாக பிரிக்க முடிவு செய்யப் பட்டது.

இது பற்றிய வழக்கை உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் கே.எஸ்.ராதாகிருஷ்ணன், தீபக் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணைக்கு எடுத்து கொண்டது.

அப்போது, இந்தச் சகோதரிகளை தனியாகப் பிரித்தால் பாதிப்பு ஏற்படுமா என்பது குறித்து மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட்டனர்.

இதையடுத்து, அகில இந்திய மருத்துவ ஆலோசனைக்குழு மருத்துவமனையின் நரம்பியல் மருத்துவர்கள், பேராசிரியர்கள் எம்.வி.பத்மா, அரவிந்த் சதுர்வேதி, டாக்டர் எஸ்.எஸ்.காலே ஆகிய 3 பேர் அடங்கிய குழு கடந்த மாதம் ஒக்ரோபர் 21 ஆம் திகதி பாட்னா சென்றனர்.

தலை ஒட்டிப்பிறந்த சகோதரிகளை பரிசோதனை செய்தனர். இதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் நேற்று மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அதில், இருவரையும் பிரித்தால் அவர்களில் ஒருவர் உயிரிழப்பது நிச்சயம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொன் அணிகள் கால்பந்தாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் அணி முன்னிலையில்

பொன் அணிகள் கால்பந்தாடடப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்னிலையிலுள்ளது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இக் கால்பந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

இந்நிலையில், 14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டி யில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 4 கோல்களைப் பெற்றுக் கொண்ட அதேவேளை, யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஒரு கோலை மாத் திரம் பெற்றுக் கொண்டது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது. 20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் பொன் அணிகளின் கால்பந்தாட்டப் போட்டியில் வருடாவருடம் விளையாடி வருகின்றன.

# இங்கிலாந்து பிறீமியர் லீக்கின் போட்டி முடிவுகள்

PREMIER LEAGUE

இடம்பெற்றுவரும் இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் நேற்றைய போட்டிகளில் மன்செஸ்டர் யுனைட்டட், நோர்விச், அஸ்டன் வில்லா, விகான் அத்லட்டிக் கழகங்கள் வெற்றி பெற்றுன.

இதேவேளை புல்ஹாம் எவேர்ட்டன், ஸ்வன்சீ செல்ீ, வெஸ்ட் ஹாம் - மன்செஸ்டர் சிட்டி ஆகிய போட்டிகள் சமநிலையில் முடிவடைந்தன.

மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்கும் ஆர்சனல் கழகத்திற்குமிடையிலான போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் 2-1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் சார்பாக 3வது, 67வது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டதோடு ஆர்சனல் சார்பாக 90வது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்டது.

புல்ஹாம் அணிக்கும் எவேர்ட்டன் அணிக்குமிடையிலான போட்டி 2-2 என்ற அடிப்படையில் நிறைவு பெற்றது.

புல்ஹாம் அணி சார்பாக 7வது, 90வது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டதோடு எவேர்ட்டன் கழகம் சார்பாக 38வது, 72வது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டிருந்தன.

நோர்விச் கழகத்திற்கும் ஸ்ரோக் கழகத்திற்குமிடையிலான போட்டியில் நோர்விச் கழகம் 44வது நிமிடத்தில் கோல் பெறப்பட்டது.

அதன் பின்னர் கோல்கள் பெறப்படாத நிலையில் நோர்விச் கழகம் 1-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

அஸ்டன் வில்லா கழகத்திற்கும் சன்டர்லான்ட் அணிக்குமிடையிலான போட்டியில் அஸ்டன் வில்லா கழகம் 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டியில் அஸ்டன் வில்லா கழகம் சார்பாக 57வது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்டது.

ஸ்வன்சீ கழகத்திற்கும் செல்ஷி கழகத்திற்குமிடையிலான போட்டி 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இப்போட்டியில் செல்ஷி கழகம் சார்பாக 61வது நிமிடத்திலும் ஸ்வன்சீ கழகம் சார்பாக 88வது நிமிடத்திலும் கோல்கள் பெறப்பட்டன.

விகான் அத்லட்டிக் கழத்திற்கும் ரொட்டென்ஹம் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் விகான் அத்லட்டிக் கழகம் 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டியில் விகான் அத்லட்டிக் கழகம் சார்பாக 56வது நிமிடத்தில் கோல் பெறப்பட்டிருந்தது.

ஹெஸ்ட் ஹாம் யுனைட்டட் அணிக்கும் மன்செஸ்டர் சிட்டி கழகத்திற்குமிடையிலான போட்டி 0-0 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்தது.

# புட்ஸல் சம்பியனானது மானிப்பாய் இந்துக் கல்லூரி



புட்ஸல் கால்ப்பந்தாட்டப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியை வென்று மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி "புட்ஸல்" என்ற பெயரில் முன்னாள் அதிபர் கே.ஏ. செல்லையா ஞாபகார்த்தமாக அணிக்கு 5 பேர் கொண்ட கால்ப்பந்தாட்டப் போட்டியை பிக்நெல் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தியது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளிலிருந்து 8 பாடசாலை அணிகள் மேற்படி சுற்றுப்போட்டிக்கு பங்குபற்றியிருந்தன. மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 4:2 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பளை யூனியன் கல்லுஸரியினையும், அரையிறுதியில் 3:1 என்ற கோல் கணக்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரியிளையும் வென்று, இறுதிப் போட்டிக்கு உள்நுழைந்தது.

இளவாலை ஹென்யரசர் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினையும், அரையிறுதியில் 7:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியையும் வென்று இறுதிப்போட்டிக்கு நுழைந்தது.

இறுதிப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கோல் மழை தொடர்ந்தது. முதல் பாதி ஆட்டத்தின் அந்த அணி 3 கோல்களை போட்டது. பதிலுக்கு ஹென்றியரசர் கல்லூரி அணி 1 கோல் மாத்திரம் போட்டது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஹென்றியரசர் கல்லூரி சுதாகரித்துக் கொண்டது. அடுத்தடு[illegible] இரண்டு கோல்களைப் போட்டு ஆட்டத்தில் சூட்டினை கூட்டியது. இருந்தும் மானிப்பாய் மேலும்ஒரு கோலை போட்டு, திரும்பவும் ஆட்டத்தை தன் கையில் எடுத்தது.

இறுதி வரை இரு அணியும் வேறு கோல்கள் போடாவில்லை. இறுதியில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று புட்ஸல் சம்பியனாகியது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வீழ்த்தியது.

# ஹபீஸை நீக்கச் சொல்லவில்லை: டேவ் வட்மோர்



பாகிஸ்தான் டுவென்டி டுவென்டி சர்வதேச அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து மொஹமட் ஹபீஸை நீக்குமாறு தான் கோரிக்கை விடுக்கவில்லை என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெளி யான ஊடக அறிக்கைகளை அவர் நிராகரித்துள்ளார்.

பாகிஸ்தான் டுவென்டி டுவென்டி சர்வதேச அணியின் தலைவரான மொஹமட் ஹபீஸை அப்பதவியிலிருந்து நீக்குமாறு பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை விடுத்ததாக சில செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள டேவ் வட்மோர், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் அவ்வாறான கோரிக்கை எதனையும் விடுத்திருக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். தான் தற்போது பாகிஸ்தானில் தங்கியிருக்கவில்லை எனத் தெரிவித்த டேவ் வட்மோர், அத்தோடு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் அவ்வாறான கோரிக்கை எதனையும் விடுத்திருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

தான் அவ்வாறு கோரிக்கை விடுத்ததாக வெளியான செய்திகள் முழுமையாகத் தவறானவை எனத் தெரிவித்த டேவ் வட்மோர், அச்செய்திகள் ஆதாரமற்றவை எனவும் தெரிவித்தார்.

இந்தியாவிற்கான மிக முக்கியமான தொடருக்காகப் பாகிஸ்தான் அணி தயாராகிவரும் நிலையில் அதைக் குழப்புவதற்காக மேற்கொள்ளப்படும் சதியே இதுவெனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக டுவென்டி டுவென்டி தொடரில் பாகிஸ்தான் அணி அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றிருந்த போதிலும், மொஹமட் ஹபீஸ் சில விமர்சனங்களைச் சந்தித்திருந்தார்.

குறிப்பாக சிரேஷ்ட வீரர் அப்துல் ரஷாக்கை அணியில் சேர்க்காமை தொடர்பாக சில விமர்சனங்கள் எழுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கால்பந்தாட்டத்தில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் கோட்ட சம்பியனாக தெரிவு

யாழ். தெல்லிப்பளை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 14 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டியில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் வசாவிளான் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் களமிறங்கி மோதிக்கொண்டன. இந்நிலையில், வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி ஒரு கோலைப் பெற்றது. ஆட்ட நிறைவில் வசாவிளான் மத்திய மகாவித்தி யாலயம் 1 இற்கு 00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

# அடுத்த ஐ.பி.எல்லில் விளையாடுவேன்

**- அடம் கில்கிறிஸ்ட்**

அடுத்தாண்டு இடம்பெறவுள்ள இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் தான் பங்குபற்றுவதற்கான அதிகவாய்ப்புக்கள் உள்ளதாக அவுஸ்திரேலியஅணியின் முன்னாள் விக்கெட் காப்பாளரும், கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் தலைவருமானஅடம் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக் அணிகள் தாங்கள் அணியில் வைத்திருக்கவிரும்பும் வீரர்களைத் தவிர்த்து ஏனைய வீரர்களைவிடுவித்துள்ளநிலையில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் சார்பாக அடம் கில்கிறிஸ்ட் இன்னமும் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியில் காணப்படுகிறார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள 41 வயதானஅடம் கில்கிறிஸ்ட், 6 ஆவது இந்தியன் பிறீமியர் லீக் தொடருக்குமுன்னதாகஅணிகள் ஒவ்வொன்றும் தங்களுக்குத் தேவையானவீரர்களை-அணியில் வைத்திருந்துள்ளதாகவும்,கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி தன்னைஅணியில் வைத் திருக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியில் தன்னைத் தொடர்ந்தும் வைத்திருக்கஅவ்வணிதீர்மானித்துள்ளநிலையில் அடுத்தாண்டு இடம்பெறவுள்ள இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் தான் விளையாடுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவித்தார்.

அடுத்தஐ.பி.எல். பருவகாலத்திற்கானதிட்டங்களைவகுத்துவருவதாகவும்,என்னநடக்கும் என்பதைத் பொறுத்திருந்தேபார்க்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றியிருந்த அடம் கில்கிறிஸ்ட்,தான் விளையாடியபோட்டிகளில் பெருமளவுதிறமையைவெளிப்படுத்தியிருக்காததோடு,அனேகமானபோட்டிகளைஉடல் உபாதைகாரணமாகத் தவறவிட்டிருந்தார்.

இவ்வாண்டுத் தொடர் முடிவடையும் போதுஅடுத்தவருடம் இடம்பெறவுள்ள இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் தான் பங்குபற்றுவதற்கானவாய்ப்புக்கள் குறைவாகவேகாணப்படுவதாகஅடம் கில்கிறிஸ்ட் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 05.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது